




# வருடாந்த முன்னேற்ற அறிக்கை 2013

தேசிய தாவரவியல்
பூங்காக்கள் திணைக்களம்

**தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்**

# வருடாந்த முன்னேற்ற அறிக்கை

## 2013

**தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்**

**த. பெ. 14, பேராதனை**

# உள்ளடக்கம்


**1. அறிமுகம்** 1

பின்னணி 1

நோக்கு 2

பணி 2

பிரதான பணிகள்

நிறுவனத்தின் ஒழுங்கமைப்பு 3

திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்கள் 4

**2. 2013 ம் ஆண்டின் முன்னேற்றம் ஒரே பார்வையில் 6**

வருமானம் 6

பார்வையாளர் வருகை 6

செலவுகள் 7

விஞ்ஞான நடவடிக்கைகள் 7

**3. மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு நிகழ்ச்சித் திட்டம்: என்ற தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்கான பங்களிப்பு 9**

**4. அயன வலயத்தின் மிகச்சிறந்த தாவரவியல் பூங்காக்களாக ஆதல் 13**
(2006-2015ம் ஆண்டுகளுக்கான திணைக்களத்தின் ஒருமித்த திட்டத்தின் பிரகாரம்)

**5. ஆராய்ச்சி 14**

**6. அபிவிருத்தி 39**

**7. கல்வி 54**

**8. செயற்பாடுகள் 59**

**9. திணைக்களத்தின் ஏனைய அலகுகளின் முகாமை 61**

**10. பூங்காக்களுக்கான விஷேட அதிதிகளின் வருகை 66**

**11. பூங்காக்களிலான விஷேட நிகழ்வுகள் 68**

**12. திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஆலோசனை சேவைகள் 69**

**13. 2014 ம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்டுள்ள செயற்பாடுகள் 71**

**14. இணைப்புக்கள்** **74**

இணைப்பு 1: பார்வையாளர் வருகை 74

இணைப்பு 2: நிதி விபரங்கள் 79

இணைப்பு 3: பணியாளர் விபரம் 86

இணைப்பு 4: பணியாளர் இடமாற்றம், பதவியுயர்வு, ஓய்வு 93

இணைப்பு 5: பணியாளர் பயிற்சி, இயலுமை விருத்தி 94

இணைப்பு 6: ஆய்வு வெளியீடுகள் 95

இணைப்பு 7: நூலக வசதி மேம்படுத்துதல் 96

1

# அறிமுகம்



அரச தாவரவியல் பூங்கா, பேராதனை



பார்வையாளர்களுக்கான தகவல்கள்



கள மதிப்பீடுகளை

## 1.1 பின்னணி

இலங்கையின் அனைத்து தேசிய தாவரவியல் பூங்காக்களும் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படுகின்றன. பேராதனை அரச தாவரவியல் பூங்கா (1821), ஹக்கல தாவரவியல் பூங்கா (1861), கம்பஹா, ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா (1876) ஆகியன வெளிநாட்டுப் பொருளாதாரத் தாவரங்கள் பற்றிய ஆய்வுக்கும் பொருளாதார மற்றும் சூழலியல் அபிவிருத்திக்கும் நாட்டின் தாவர வளங்களைக் கண்டறிவதற்குமாக பிரித்தானியாகளால் ஆரம்பிக்கப்பட்டன.

இத்தாவரவியல் பூங்காக்களுக்கு மேலதிகமாக, மூலிகைத் தாவரங்களின் பாதுகாப்பு, நிலையான பாவனை மற்றும் முகாமைத்துவம் ஆகிய பணிகளுக்காக தேசிய மூலிகைத் தாவரப் பூங்காவொன்று 1950ல் ஆரம்பிக்கப்பட்டது. அண்மையில் அம்பாந்தோட்டையிலும் அவிசாவலையிலும் முறையே உலர் வலய மற்றும் ஈர வலயத் தாவரங்களின் வெளிவாரிப் பேணுகை நோக்கிலும் பிராந்தியத்தில் மூலிகை மற்றும் பூச்செடிச் செய்கையை ஊக்குவித்து நாட்டின் பொருளதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் நோக்கிலும் இரு தாவரவியல் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மிரிஜ்ஜவிலவில் அமைக்கப்பட்டுள்ள தாவரவியல் பூங்கா 130 வருடங்களின் பின்னர் உள் நாட்டு நிபுணர்களால் வடிவமைக்கப்பட்ட முதலாவது தாவரவியல் பூங்காவாகும்.

இத்திணைக்களத்தின் தேசிய தாவரக்கயம் தாவர சான்றுப்படுத்தல் பணிகளையும் தாவர வகைப்படுத்தல் குறித்த ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் தாவரவியல் விஞ்ஞானத்தின் ஏனைய பணிகளையும் மேற்கொள்கின்றது. பூச்செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலகானது பூச்செடிச் செய்கை ஆய்வுகளில் ஈடுபடுவதன் மூலம் நாட்டில் பூச்செடிச் செய்கைக்கான வாத்தக வாய்ப்புக்களை ஊக்குவிக்கும் பணியை பல்வேறு ஊடகங்கள், பணிகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் ஊக்குவிக்கிறது. இத்திணைக்களத்தின் கல்வி மற்றும் பயிற்சி நிலையமானது, ஒரு நாள் குறுங்கால கற்கை நெறிகள், 1 வருட மற்றும் 2 வருட டிப்ளோமா கற்கை நெறிகள் ஆகியனவற்றை வழங்குகின்றது. தாவரவியல் பூங்காவானது, ஓய்வெடுத்தலுக்கான வசதிகளை வழங்குவதோடு, உலகின் பல பகுதிகளிலிருந்தும் தருவிக்கப்பட்ட அதன் தாவரங்கள் தாவர இராச்சியத்தின் அழகையும் பன்மைத்துவத்தையும் பறை சாற்றுகின்றன. அத்தோடு தாவரப் பேணுகை, உயிரியல் பல்வகைமை, பூச்செடிச் செய்கை பற்றிய அறிவையும் பகிர்கின்றது.

## இலக்கு

இலங்கையின் தாவரப் பாதுகாப்பிற்கான பிரதான மையமாக அமைந்து, உள்நாட்டுப் பொருளாதார மேம்பாட்டுக்காக முழுமையான பங்களிப்பை வழங்குவதுடன், தாவரவியல் விஞ்ஞான ரீதியாகவும் அழகியல் ரீதியாகவும் உலகின் மிகச்சிறந்த அயன மண்டல வலய தாவரவியல் பூங்காவாக ஆகுதல்.

## பணி

இலங்கையின் இயற்கையானதும் வளமானதுமான சூழலில் காணப்படும் தாவரவியல் பற்றிய கற்கையாய்வு, நிலையான பாதுகாப்பு மற்றும் பொழுதுபோக்குக்கான சந்தர்ப்பங்களை மக்களுக்கு வழங்குதல்

**1. 2** செயற்பாடுகள்

- இலங்கையின் தாவரவியல் பல்வகைத் தன்மையினை பாதுகாப்பதில் வெளிவாரிப் பாதுகாப்பு முறைகளை செயல்வலுப் பெறச் செய்தல் தொடார்பில் தேவையான திட்டங்களை வகுத்தலும் செயல்படுத்தலும்
- கல்வி மற்றும் தொடர்பாடல் முறைகளை பயன்படுத்தி இலங்கையின் தாவர வளங்கள் சம்பந்தமாகவு தாவர வளங்களுடன் தொடர்புற்றுக் காணப்படும் பல்வேறு வகையான கைத் தொழில் நடவடிக்கைகளுக்கு தேவைப்படும் சரியான தகவல்களையும் கலையறிவினையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- இலங்கையில் பூச்செடிச் செய்கைக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான பல்வேறு ஆராய்ச்சிகள் மற்றும் தொழில் நுட்ப முறைகளை பரீட்சித்தல் மற்றும் செயல்படுத்துதல்.
- இலங்கையின் தேசிய தாவரவியல் பூங்காக்களை உயர் தரத்தில் பராமரித்தல்.
- பொருத்தமான இடங்களில் புதிய தாவரவியல் பூங்காக்களை உருவாக்குவதற்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்தல்.
- அலங்கார தாவரவியல் ஆய்வினை இலங்கையில் விஸ்தரிப்பதற்குத் தேவையான ஆராய்ச்சிகள் மற்றும் தொழில்நுட்ப வேலைத்திட்டங்களை அமுலாக்குதல்.
- இலங்கையின் வரலாற்று முக்கியத்துவம் மிக்க தாவரங்களை பாதுகாப்பதற்குத் தேவைப்படும் தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்.
- அநுராதபுரம் புனித அரச மரத்தின் ஆரோக்கியத்தைப் பேணுதல்.






ஹக்கல பூங்காவின் ரோசா நாற்று மேடை    நன்கு பராமரிக்கப்படும் பூங்கா    புனித அரச மரத்தின் ஆரோக்கியம்

1.3 `

## 1.3 நிறுவனக் கட்டமைப்பு



## 1.4 இத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் நிறுவனங்களும் அலகுகளும்

### அரச தாவரவியல் பூங்கா, பேராதனை

1821ல் நிறுவப்பட்ட பேராதனை, அரச தாவரவியல் பூங்காவானது தாவரப் பேணுகை, மக்களுக்குக் கல்வியூட்டல் மற்றும் இலங்கையின் பொருளாதார, சூழலியல் அபிவிருத்திப் பணிகளுக்குப் பெரும் பங்காற்றுகின்றது.

கண்டி நகருக்கு அண்மையில் 61.25 ஹெக்டெயார் நிலப்பரப்பில் அமைந்துள்ள இப்பூங்காவானது, கல்வி, தாவரவியல் ஆய்வு, சூழலியல் மற்றும் அலங்காரப் பூங்காவியல் நிலையமாகவும் மக்களுக்கு ஓய்வளிக்கும் இடமாகவும் திகழ்கின்றது.

அது ஓக்கிட்கள், வாசனைத் திரவியங்கள், மூலிகைகள், பனை மரங்கள் உள்ளிட்ட 4500 வகைகளுக்கும் மேற்பட்ட தாவரங்களைக் கொண்டு வருடாந்தம் 02 மில்லியனுக்கும் அதிகமான பார்வையாளர்களைக் கவர்ந்திழுக்கிறது.

### தேசிய தாவரக்கயம் - பேராதனை

இலங்கையினதும் மற்றும் வெளிநாடுகளதும் தாவரங்களின் உலாந்த தாவரக்கய மாதிரிகளை முறையான ஆய்வுகளுக்காக பாதுகாத்து வைக்கும் இடமே தேசிய தாவரவக்கயமாகும். இங்கு 160,000 க்கும் அதிகமான தாவரக்கய மாதிரிகள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. அத்தோடு தாவரங்கள் பற்றிய 3500 க்கும் மேற்பட்ட புத்தகங்களும் சஞ்சிகைகளும் இதன் நூலகத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

### பூச் செடிச் செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவு, பேராதனை.

பூச்செடிச் செய்கைத் துறையோடு தொடர்பான ஆய்வுகளைச் செய்து இலங்கையின் பூச்செடிச் செய்கைத் துறையின் அபிவிருத்திக்குப் பங்களிப்பது இவ்வலகின் பணியாகும். பயிற்சி நிகழ்ச்சிகளையும் கள ஆலோசனைகளையும் இத்துறையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புக்கள் குறித்த தகவல்களையும் வழங்குவதிலும் பொருட்கள், உபகரணங்கள், தரமான உற்பத்தி சாதனங்கள் ஆகியனவற்றை பூ வளர்ப்போருக்கு வழங்குவதிலும் மாவட்ட மட்டத்தில் பூ வளர்ப்போர் சங்கங்களை அமைத்து அத்துறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்பதிலும் இப்பிரிவு முனைப்போடு ஈடுபடுகின்றது.

### ஹக்கல தாவரவியல் பூங்கா, ஹக்கல

ஹக்கல தாவரவியல் பூங்கா 1861 இல் உருவாக்கப்பட்டது. இது இலங்கையின் இரண்டாவது பெரிய தாவரவியல் பூங்காவாகும். இப்பூங்காவின் தாவரங்கள் உப அயன வலயத்துக்குரியவையாகும். அங்கு உள்நாட்டுத் தாவரங்கள், மலைத் தாவரங்கள், ஏனைய உப அயன வலய நாடுகளிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட தாவரங்கள் ஆகியன முறையாக நடப்பட்டுள்ளன.

### ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா – கம்பஹா

கம்பஹா, ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா 1876ல் றப்பா பயிர்ச் செய்கையை இலங்கையில் ஊக்குவிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது. 43 ஏக்கா பரப்பைக் கொண்ட இப்பூங்கா வளமான வரலாற்றைக் கொண்டதும் தாவரவியல் மற்றும் அலங்காரப் பூச்செடியியல் கவர்ச்சியைக் கொண்டதுமாகும். இது இலங்கையையும் வெளிநாடுகளையும் சேர்ந்த 2000த்துக்கும் அதிகமான தாவர வகைகளைக் கொண்டு காணப்படுகின்றது.

**மூலிகைப் பூங்கா – கனேவத்த**

இப்பூங்காவானது வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ளது. 52 ஏக்கர்கள் கொண்ட இப்பூங்காவில் பல வகைகளையும் சார்ந்த மூலிகைகள் பயிரிடப்பட்டுள்ளன.

இலகுவில் பெற்றுக் கொள்ள முடியாத, அரிய மூலிகைகளை பேணிப்பாதுகாப்பதும் மருந்து மூலிகைகளை முறையாக வளர்த்துச் சேமிப்பதும் இப்பூங்காவின் நோக்கங்களாகும். அத்தோடு மூலிகை விற்பனையிலும் முறையான மூலிகை வளர்ப்புப் பற்றிய அறிவை வழங்குவதிலும் இது ஈடுபடுகிறது.

**உலர் வலய தாவரவியல் பூங்கா, மிரிஜ்ஜவில, அம்பாந்தோட்டை**

இப்பூங்காவானது 130 வருடங்களுக்குப் பிறகு உள்நாட்டு நிபுணர்களால் வடிவமைக்கப்பட்ட இலங்கையின் முதலாவது பூங்காவாகும். 300 ஏக்கர்கள் கொண்ட இது தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மிரிஜ்ஜவில பகுதியில் அமைந்துள்ளது. இதன் அபிவிருத்திப் பணிகள் 2006 ல் ஆரம்பிக்கப்பட்டன.

உலர் மற்றும் அதி உலர் வலயத் தாவரங்களை வெளிவாரிப் பேணுகை முறைமையின் கீழ் பாதுகாப்பதும் உள் நாட்டுப் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பதும் இதன் பிரதான குறிக்கோளாகும்.

**இலுக்ஓவிட்ட, ஈரவலய தாவரவியல் பூங்கா (அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன)**

அவிசாவலைக்கு அண்மையில் அமைந்துள்ள இதன் அபிவிருத்திப் பணிகள் 2008ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. இது 105 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது.

ஈர வலய தாழ் நிலத் தாவரங்களை வெளிவாரிப் பேணுகை முறை மூலம் பாதுகாப்பது இதன் பிரதான குறிக்கோளாகும். மேலும் இது பொருளாதார, அழகியல் மற்றும் சூழலியல் பெறுமானம் கொண்ட தாவரங்களைக் கொண்டிருப்பதோடு ஓய்வளிக்கும் இடமாகவும் தொழிற்படவுள்ளது.

**சுவஹஸ் மல் செவன, கொழும்பு.**

நாரஹேன்பிடவில் அமைந்துள்ள இவ்வலகானது, இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் இயங்கும் 'சுவஹஸ்மல்' சங்கங்களின் அங்கத்தவர்களால் உற்பத்தி செய்யப்படும் பூச்செடியியல் உற்பத்திகளை சந்தைப்படுத்தும், இத்திணைக்களத்தின் முக்கிய அலகாகத் தொழிற்படுகிறது.

**அதி மேதகு ஜனாதிபதி மற்றும் மாண்பு மிகு பிரதமர் ஆகியோரது வாசஸ்தலப் பூங்காக்கள்**

அதி மேதகு ஜனாதிபதி அவர்களின் கொழும்பு, கண்டி, நுவரெலியா, அனுராதபுர வாசஸ்தலங்களின் பூங்காக்கள் மற்றும் மாண்பு மிகு பிரதமர் அவர்களின் கொழும்பு மற்றும் நுவரெலியா வாசஸ்தலங்களின் பூங்காக்கள் இத்திணைக்களத்தால் நிர்வகிக்கப்படுகின்றன.

**பொதுநலவாய போர் சமாதிகள்**

பொது நலவாய போர் சமாதிகள் கண்டி, ஜாவத்தை, பொரல்ல மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் இரண்டு உலகப் போர்களிலும் இறந்த பொது நலவாய நாடுகளின் போர் வீரர்களை நினைவு கூரும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ளன. இவை இத்திணைக்களத்தாலேயே நிர்வகிக்கப்படுகின்றன.

**பசுமை இல்லம், மீகல்லாவ(அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன)**

மீகல்லாவ பசுமை இல்லமானது வடமேல் மாகாணத்தில், குருனாகலையிலிருந்து 60 மைல் தூரத்தில் அமைந்துள்ளது. தற்போது இது 06 ஏக்கர்கள் விஸ்தீரணம் கொண்டது. அபிவிருத்தி செய்யப்பட்டு


வருகின்ற இது பூச்செடியியல் துறையில் உள்ளகப் பணியாளர்களுக்கும் பிரதேசப் பொதுமக்களுக்குமான பயிற்சி நிலையமாகவும் தாவர உற்பத்தி நிலையமாகவும் செயற்படவுள்ளது.

2

**முன்னேற்றம் ஒரே பார்வையில்**


## 2.1. 2013ன் வருமானம்

- நுழைவுக் கட்டணம், தாவர விற்பனை மற்றும் வாடகைகள் மூலம் 2013 இல் ரூபா 416.8 மில்லியன்கள் மொத்த இலாபமாக பெறப்பட்டது. முன்னைய வருடத்தோடு ஒப்பிடும் போது (ரூபா 382.8 மில்லியன்) இது 9% அதிகரிப்பாகும். பின்வரும் வரைபு ஒவ்வொரு அலகிலிருந்தும் பெறப்பட்ட வருமானத்தைக் காட்டுகிறது.




## 2.2. 2013ல் பார்வையாளர் பற்றிய விபரம்

இவ்வருடமும் பார்வையாளர் எண்ணிக்கை 02 மில்லியன்களை விடவும் அதிகமாகும். (2,076,523) வெளிநாட்டுப் பார்வையாளர் எண்ணிக்கை (293,454) கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது (259,545) 13% வீத அதிகரிப்பை காட்டுகிறது. பின்வரும் வரைபு 2012 மற்றும் 2013ம் ஆண்டுகளில் பூங்காக்களுக்கான பார்வையாளர் வருகையை ஒப்பீட்டு அடிப்படையில் காட்டுகின்றது.



## 2.3. செலவுகள் 2013

- மூன்று பிரதான பூங்காக்களதும் ஏனைய அலகுகளதும் அபிவிருத்திப் பணிகள் திட்டமிட்டபடி நிறைவேற்றப்பட்டு 80.3% மொத்த நிதி முன்னேற்றம் பெறப்பட்டது. மூலதன ஒதுக்கீட்டின் கீழ் நிறைவு செய்யப்பட்ட பணிகளுக்கான நிதியை திறைசேரியிலிருந்து பெறுவதில் இவ்வருடத்தின் கடைசி இரு மாதங்களிலும் சில தாமதங்கள் ஏற்பட்டன. பின்வரும் அட்டவணை இவ்வருடத்திற்கான திணைக்களத்தின் நிதி ஒதுக்கீடுகள் பற்றி விளக்குகின்றது.

| விபரம் | தேறிய ஒதுக்கீடு (ரூபா மில்) | மொத்தச் செலவு (ரூபா மில்) | செலவு வீதம் |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 448.15 | 349.89 | **78.1** |
| மீண்டெழும் செலவு | 226.95 | 192.54 | **84..8** |

## 2.4. விஞ்ஞான நடவடிக்கைகள் 2013

- திட்டமிட்ட படி விஞ்ஞான நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டு, நாட்டில் பூச்செடி செய்கையை அபிவிருத்தி செய்தல், தாவர வகைப்படுத்தல் மற்றும் முறைமைகளுடன் தொடர்பான பல ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. பொது மக்களில் பல்வேறு குழுக்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள், தாவரங்களை கண்டறிதல் மற்றும் பயிரிடல் நிகழ்ச்சித்திட்டங்களும் திட்டமிட்டபடி மேற்கொள்ளப்பட்டன.

| | |
|---|---|
| **மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் (பூச்செடி செய்கை, தாவர வகைப்படுத்தல் போன்றன)** | **28** |
| **பிரசுரிக்கப்பட்ட ஆய்வு கட்டுரைகள்** | 13 |
| **பூங்காக்களில் மக்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள்** | |
| உயிரியல் பல் வகைமை பேணல் | 333 |
| தாவரப் பேணுகை | 1161 |
| பூச்செடி செய்கை | 15,247 |
| பூச்செடியியல் துறையிலான பாடசாலை செயற்திட்டங்களுக்காக உதவி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை | 34 |
| நில வடிவமைப்பு | 2,037 |
| தாவர முறைமை மற்றும் தாவரக் கய முகாமைத்துவம் | 1171 |
| 3 மாத டிப்ளோமா | 96 |
| தாவரங்கள், நாற்றுமேடை முகாமை, அறுவடைக்குப் பின்னரான நுட்பங்கள் பற்றிய | 3,048 |

| | |
|---|---|
| பயிற்சிகள் | |
| பூங்காக்களில் தாவர உற்பத்தி | 438,823 |
| தாவர விற்பனை | 253,403 |
| கள ஆய்வுப் பயணங்கள் | 59 |
| பூங்காக்களின் மரத்தோட்டங்களுக்கு சேர்க்கப்பட்ட புதிய மரங்கள் | 7,120 |
| வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் | |
| தேசிய சிவப்பு பட்டியலிடல் செயற்திட்டம் | விரிவான களக் கண்டாய்வுகள் மூலம் சிவப்பு தரவுப் புத்தகம் இற்றைப்படுத்தப்பட்டது |
| தேசிய செயலமர்வுகள் | தாவர நுண்மை வகையியல் பற்றிய 05 நாள் வதிவிட செயலமர்வொன்று மார்ச் மாதம் தேசிய தாவரக்கயத்தில் இடம்பெற்றது. |
| தாவரவியல் கணக்கெடுப்பு | தாவர கண்டறிதல்கள், குறிப்பாக அழிவுறும் அபாயத்துக்குட்பட்ட உலர் மற்றும் ஈர வலய தாவர மாதிரிகளை சேகரித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. |
| பூச்செடிச் செய்கை தொடர்பான தேசிய ஆய்வரங்கு | பூச்செடிச் செய்கை ஆய்வு பற்றிய 06ஆவது தேசிய ஆய்வரங்கு(NaSFloR) 2013 டிசம்பர் 19ம் திகதி விவசாய ஆய்வுக் கொள்கை சபையுடன் இணைந்து நடாத்தப்பட்டது. (CARP). |
| புதிய கலப்பினங்கள் | அந்தூரியம் மற்றும் ஓக்கிட் வகைகளின் 02 கலப்பினங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதோடு, களத்தில் அந்தூரியம் மற்றும் ஓக்கிட் வகைகளின வேறு 08 கலப்பினங்கள் உருவாக்கப்பட்டன. |

3

**மஹிந்த சிந்தனை: எதிர்கால நோக்கு - தேசிய அபிவிருத்திக் கொள்கைத் திட்டத்துக்கான பங்களிப்பு**

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களமானது அதன் 2006 - 2015 கூட்டுத் திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான மாதிரியொன்று என்ற வகையில் தனது இலக்குகளை அடைந்து கொள்ளும் அதே வேளை, அரசின் அபிவிருத்திக் கொள்கைத் திட்டமான மஹிந்த சிந்தனை: எதிர்கால நோக்கு அடிப்படையிலான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றது.

**திணைக்களத்தின் கூட்டுத் திட்டத்தில் முக்கிய நான்கு விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன.**

- ஆய்வு
- அபிவிருத்தி
- கல்வி மற்றும் பயிற்சி (விரிவாக்க மற்றும் வெளிவாரிக் கற்கைகள் அடங்கலாக)
- மேலும் இடைவெட்டு எண்ணக்கருவாக செயற்பாடுகளை செயற்றிறன் மிக்க வகையில் முகாமைத்துவம் செய்தல்.

திணைக்களத்தின் கூட்டுத் திட்டத்தில் அடங்கியுள்ள நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்திட்டங்களும் அரசின் (2010-2016) அபிவிருத்திக் கொள்கைத் திட்டமான மஹிந்த சிந்தனை: எதிர்கால நோக்கு வேலைத்திட்டத்தின் கொள்கைகளுக்கு இணக்கமானவையாகும்.

- **மஹிந்த சிந்தனை: எதிர்கால நோக்கு வேலைத்திட்டத்தின்** கீழ் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.
- **பணி -2ன் கீழான (பசுமை இலங்கை) எனும் பத்து வருட நிகழ்ச்சித்திட்டக் கூற்று:** விலங்குகள், தாவரங்கள் மற்றும் சூழல் தொகுதிகளைப் பாதுகாத்தல்: மேலும் பல தாவரவியல் பூங்காக்களையும் உயிரின சேகரிப்புக் களங்களையும் நிறுவுதலும், அனைத்து உயிரியல் காலநிலைப் பிராந்தியங்களிலும் உயிரினப் பல்வகைமையை வெளிவாரி முறைமையில் பேண அவற்றைப் பணித்தலும்.
- திணைக்களமானது இப்பணியில் முனைப்போடு ஈடுபட்டது.



**அம்பந்தோட்டை உலர் வலய தாவரவியல் பூங்காவைப் பார்வையிடும் மாணவர்கள்**



**அம்பந்தோட்டை உலர் வலய தாவரவியல் பூங்காவின் மலர்கள்**

இலங்கையில் பல தாவரத் தொகுதி வலயங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக உலர் வலய தாவரத் தொகுதியில் குறிப்பிடத்தக்க பொருளாதார முக்கியத்துவம் நிலவுகிறது. உலர் வலயத்திலான ஒரு புதிய பூங்கா அம்பாந்தோட்டைக்கு அண்மையில் அமைக்கப்படுகிறது. ஈர வலயத்தில் மற்றொரு பூங்கா அமைக்கப்படுகிறது. மொத்தமாக ஐந்து நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

- தாவர வெளிவாரிப் பேணுகை;
- குறைவாக அறியப்பட்ட மற்றும் குறை பாவனையுடைய தாவரங்களைச் சேகரித்தல்;
- நில அலங்கார வடிவமைப்புத் துறையில் தேர்ச்சி;
- மருந்து மூலிகைக் கைத்தொழில் ஊக்குவிப்பு;
- தாவரவியல் மற்றும் பூச்செடியியல் கல்வி மற்றும் பயிற்சி.

புதிய பூங்காக்களில் பல கவர்ச்சி மிகு அம்சங்கள் இணைக்கப்படும். குறிப்பாக மிக அரிதான மற்றும் அழிவுறும் ஆபத்தை எதிர் நோக்கியுள்ள இலங்கைக்குரிய மூலிகைகளை உள்ளடக்கிய மூலிகைத் தோட்டங்கள் மற்றும் விஷேட தாவரவியல் முக்கியத்துவமுடைய தாவரங்களை குல அடிப்படையில் பாகுபடுத்தி வெளிக்களத் தாவரங்களாக நடுதல் ஆகிய பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

➢ **மஹிந்த சிந்தனை:** ***எதிர்கால நோக்கு*** **- 10 வருட அபிவிருத்தி வேலைத்திட்டக் கூற்று :** ***"இலங்கையானது ஒரு பொக்கிஷத்தின் மத்தியில் அமைந்திருப்பதனால், அயன வலய பூச்செடியியல் துறையியல் பிரதான வகிபாகமொன்றை அதனால் வகிக்க முடியும்"***

பூங்காவானது பொருத்தமான ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் விவசாயிகளுக்குத் தேவையான தொழில் நுட்ப மற்றும் ஏனைய ஆற்றல்களை வழங்கி உள்நாட்டுப் பூச்செடியியல் துறையை ஊக்குவிக்கின்றது. மஹிந்த சிந்தனை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புதிய சுற்றுலா அபிவிருத்தி வலயமொன்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாலும் மத்தள சர்வதேச விமான நிலையம் திறந்து வைக்கப்பட்ட பின்னர் ஏற்றுமதிச் சந்தைக்கான வாய்ப்புக்கள் கிடைக்கும் என்பதனாலும் திணைக்களமானது குறிப்பாக அம்பாந்தோட்டையில் பூச்செடியியல் கைத்தொழிலை அபிவிருத்தி செய்யத் திட்டமிட்டுள்ளது. அவாகையில் அம்பாந்தோட்டைப் பூங்காவானது பிரதேச பூ வளர்ப்போரது இயலுமைகளை விருத்தி செய்ய பல நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துகின்றது.

➢ **மஹிந்த சிந்தனை:** ***எதிர்கால நோக்கு*** **- 10 வருட அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழான தொழில் நுட்ப மற்றும் தொழில் கல்வி என்ற தலைப்பின் கூற்று -:** ***"வாழ்வதற்கான திறமைகள் - திறமைகளுக்கான தொழில்கள் "; உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊழியச் சந்தைக்குத் தேவையானதும் நவீன தொழில் நுட்பத்துடன் இயைந்த வகையிலுமான தேசிய மற்றும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற பயிற்சிகளை வழங்குதல்.***





**திணைக்களத்தின் ட**
**உருவாக்கிய ஏ**

**03 மாதப் பயிற்சி நெறி மாணவர்கள்**

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களமானது பூச்செடியியல் மற்றும் நில அலங்காரவியல் துறையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறிகளை நவீன தொழில் நுட்பத்துடன் இணைத்து வழங்குவதன் மூலம் அத்துறையில் தேசிய மற்றும் சர்வதேச சந்தைக்குத் தேவையான ஊழியர் படையை உருவாக்கப் பங்களிக்கின்றது. இத்துறையில் ஆர்வம் காட்டுவோர் தொழில் மைய உயர் தகைமைகளைப் பெற்றுக்கொள்ள வழி செய்யும் வகையில் தொழில் மையப் பயிற்சியுடனான ஒரு வருட தேசிய டிப்ளோமா கற்கை நெறியையும் இரு வருட உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறியையும் இத்திணைக்களம் வழங்குகின்றது.

அதற்கு மேலதிகமாக ஒரு நாள் மற்றும் இரு நாட்கள் குறுங்காலப் பயிற்சிகளையும் மூன்று மாத கால சான்றிதழ் கற்கையையும் இத்திணைக்களமானது பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள்,பாடசாலைகளை விட்டு விலகியோர், சிறிய தர வியாபாரிகள் மற்றும் வேறு விஷேட நபர்களுக்கு வழங்குகின்றது.

- **மஹிந்த சிந்தனை: *எதிர்கால நோக்கு* - 10 வருட அபிவிருத்தி வேலைத்திட்டக் கூற்று : “சூழலியல் சுற்றுலாத்துறை, நாட்டின் இயற்கை அமைவிடம் மற்றும் சூழலியல் பெறுமானங்கள் ஆகியனவற்றின் அடிப்படையிலான சுற்றுலாத்துறை இயலுமையின் பயனை அடைந்து கொள்ளும் வகையில் அவற்றின் மீது விஷேட கவனம் செலுத்தி சுற்றுலா உற்பத்திகள் பல்வகைமைப்படுத்தப்படும் ”**

**நாட்டில் சூழலியல் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் வகையில் பூங்காக்கள் அவற்றின் நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்திச் செயற்படுவதோடு அவற்றின் கல்வி மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சிகளை அத்துண குறித்துப் பயன்படுத்திக் கொள்வதிலும் கவனம் செலுத்துகின்றன.**

**மஹிந்த சிந்தனை: *எதிர்கால நோக்கு* - 10 வருட அபிவிருத்தி வேலைத்திட்டக் கூற்று : ‘மக்கள் தமது வாழ்வாதரங்களை அபிவிருத்தி செய்து கொள்ளவும் அவற்றை நிரந்தரமாகப் பேணவும் அதன் மூலம் தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக்கொள்ளவும் பலப்படுத்தபப்டுவர்.**

இலங்கையில் அதிகம் தரிசிக்கப்படும் கலாசார மற்றும் விஞ்ஞான நிறுவனம் என்ற வகையில் பூங்காக்கள் பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் நல நன்மைகளை சமூகத்துக்கு வழங்குகின்றன. சுற்றுலாத்துறை நடவடிக்கைகளில் ஒன்று என்றவகையில் பூங்காக்களைப் பார்வையிடுவதும் உள்ளடக்கப்படுகின்றமையால், சுற்றுலாப் பயணிகள் குறித்த பிரதேசத்தில் கூடியளவு நேரம் தங்க வேண்டியேற்படுகின்றது. அதனால் உள்ளூர் வியாபாரங்கள் பல நேரடி நன்மைகளைப் பெற்றுக்கொள்கின்றன. இதன் பன்முனை விளைவுகள் என்றவகையில் முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களிலும் சேவைகளிலுமான முதலீடுகள் அதிகரித்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதோடு, பூங்காக்களை மிகவும் ரம்மியமானவையாகப் பேணவும் வழியமைக்கின்றன.



**அரச தாவரவியல் பூங்காவில் பார்வையாளர்கள் ஓய்வெடுக்கும் காட்சி**



**பூ வளர்ப்போருக்கான செய்முறைப் பயிற்சி அமர்வொன்று**

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் பூச்செடியியல் ஆற்றல்களையும் நில அலங்காரத் துறையையும் அலங்கார பூ வளர்ப்பையும் வளர்க்கவும் ஊக்குவிக்கவும் அவற்றின் மூலம் இளைஞர்கள், பெண்கள் மற்றும் பொது மக்களிடையேயான வேலை வாய்ப்பின்மையைப் போக்கவும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் பங்களிப்புச் செய்கின்றது.

**அயன மண்டலத்தின் மிகச்சிறந்த தாவரவியல் பூங்காக்களாக ஆதல்**

( திணைக்களத்தின் 2006-15 கூட்டுத் திட்டத்தினால் வழிநடாத்தப்பட்ட )

கடந்த பல வருடங்களாக தாவரவியல் பூங்காக்கள் திணைக்களமானது தனது கூட்டுத் திட்டத்தினாலேயே வழி நடாத்தப்படுகின்றது. .

இத்திட்டத்தை வகுப்பதில் திணைக்களமானது ஆய்வு, அபிவிருத்தி, கல்வி மற்றும் பயிற்சி ஆகிய நான்கு முக்கிய கருப்பொருட்களையும் மற்றும் குறுக்குவெட்டு கருப்பொருளாக செயற்பாடுகளை செயற்றிறன் மிக்க வகையில் முகாமை செய்தல் என்ற எண்ணக்கருவையும் கவனத்தில் எடுத்தது. தாவரவியல் பூங்காக்கள் சாதிக்க முனையும் முக்கிய மூன்று கூறுகள் காணப்படுகின்றன. :

- உயர் தரத்திலான விஞ்ஞான ஆய்வுகள் மூலம் தாவரப் பல்வகைமை, உயிரினப் பல்வகைமை மற்றும் பேணுகை குறித்த அறிவை மேம்படுத்துதல்.
- இலங்கைக்கான செயற்றிறன் மிக்க விளைவுகள் - எமது தனித்துவமான முதலீடு மற்றும் புலமைச் சொத்துக்கள், செயற்திட்ட அபிவிருத்திகள், நேரடி ஈடுபாடு, இயலுமை விருத்தி மற்றும் தரவுப் பங்களிப்பு, உள்வாரி மற்றும் வெளிவாரிப் பேணுகை நிகழ்ச்சிகள், பூச்செடியியல், சூழலியல் சுற்றுலாத்துறை ஆகியன குறித்த பிரயோக அனுபவம் மற்றும் அறிவு ஆகியவற்றின் மீது தாக்கம் செலுத்துகின்ற பிரயோக ரீதியான செயனமுறைகள்.
- தாவரவியல் பூங்காக்கள் குறித்த பொதுமக்களது விழிப்புணர்வையும் ஏற்பையும் அதிகரித்தல், கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்துதல் மற்றும் எமது முக்கிய சேகரிப்புகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கான வசதிகளை மேம்படுத்துதல்

இவ்வறிக்கையானது 2013ம் ஆண்டில் திணைக்களத்தின் மூலோபாயத் திட்டத்தின் அடைவுகளை அளவிட்டுக் காட்டுகின்றது.



**எமது எதிர்பார்ப்பு**

- உயர் தரத்திலான விஞ்ஞான ஆய்வுகள் மூலம் தாவரப் பல்வகைமை, உயிரினப் பல்வகைமை மற்றும் பேணுகை குறித்த அறிவை மேம்படுத்துதல் மற்றும் உரிய ஆய்வுகள் மூலம் நிகழ் கால மற்றும் எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் வகையில் நாட்டில் பூச்செடியியலை அபிவிருத்தி செய்தல்.

**முக்கிய குறிக்கோள்கள்**

பூச்செடியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி

- பூச்செடியியல் ஆய்வு நிகழ்ச்சித்திட்டங்கள்
- புதிய அலங்காரத் தாவர அறிமுகம்
- **தாவர உற்பத்தி**
- **நாடு தழுவிய பூச்செடியியல் விரிவாக்க** நிகழ்ச்சித்திட்டங்கள்

***தாவரப் பல்வகைமை ஆய்வு***

- **இலங்கையின் தாவர வளங்களை கண்டறிந்து ஆவணப்படுத்துதல்**
- **தேசிய தாவரக்கய முகாமை**
- **உயிரினப் பல்வகைமையை புரிந்து கொள்ளலும் முகாமை செய்தலும்**



**அந்தூரியம் மற்றும் ஒகிட் கலப்பினங்கள்**

## 5.1. குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் பொருட்டான நிகழ்ச்சித் திட்டங்கள்

### 5.1.1. பூச்செடியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி

#### 5.1.1.1. பூச்செடியியல் ஆய்வு நிகழ்ச்சித் திட்டம்

பூச்செடியியல் ஆய்வு நிகழ்ச்சித் திட்டமானது இத்தொழிற்துறையின் நிகழ்கால மற்றும் எதிர்காலத் தேவைகளில் கவனம் செலுத்துவதோடு, வனங்களில் காணப்படும் தாவர வகைகளைக் கொண்டு புதிய வகைகளைக் கண்டறிந்து அறிமுகம் செய்யும் ஆய்வுகளிலும் விவசாயவியல், புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட தாவரங்களை பேரளவில் இனப்பெருக்கம் செய்தல், பாரம்பரிய மற்றும் மாற்று வளர்ப்பு முறைகள், பூச்செயடியியல் இயலுமை கொண்ட நீர்த்தாவரங்கள், உயர் பெறுமானம் கொண்ட பூக்கள், உள்நாட்டுத் தாவரங்களிலிருந்தான இயற்கை உற்பத்திகள் ஆகியனவற்றிலும் கவனக் செலுத்துகின்றது.

நுண் தாவரங்களை உருவாக்குதல், விவசயவியல், அறுவடைக்குப் பின்னரான தொழில் நுட்பம், பீடை மற்றும் நோய்க் கட்டுப்பாடு மற்றும் தாவர வளர்ப்பு என்பன குறித்து பல ஆய்வுகள் பூச்செடியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலகினால் முன்னெடுக்கப்பட்டன.

***அ. நுண் தாவரங்களை உருவாக்குதல் / விவசாயவியல்***

- ஜெர்பரா நுண் தாவரங்களை உருவாக்குவதில் ஊடகக் கலவைகளின் தாக்கம் பற்றிய ஆய்வொன்று மேற்கொள்ளபப்ட்டது. (*Gerbera jamesonii* var. Kilmanjaro).



***Lagenandra ovata***



***Lagenandra lancifolia***

- *Lagenandra lancifolia* மற்றும் *Lagenandra ovate* தாவரங்களின் நுண் தாவரங்களை ஆய்வுகூடத்தில் உருவாக்குதற்கான முறைமையொன்று விருத்தி செய்யப்பட்டது, *Lagenandra ovata* தாவரத்துக்கான தொற்று நீக்கல் முறைமைகளில் 0.2% மேகரிக் குளோரைட் மற்றும் 25% சோடியம் ஹைபக்குளோரைட் சேர்மானமானது நுண் கிருமிகளுக்கெதிராக கூடுதலாக பயனளிக்கவல்லது என நிரூபிக்கப்பட்டது.
- ஆ. விவசாயவியல்
- அந்தூரியம் செடிகளுக்கான உரப் பிரயோகம் தொடர்பாக மதிப்பீடு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது காண்பிக்கப்பட்ட சிறந்த பெறுபேறு N : P : K – 20 : 20 : 20 ஐ விட N : P : K – 30 : 10 : 10 சிறந்தது என நிரூபணமானது.



அந்தூரியம்



*Ficus nitida*



போகன்விலா

*Ficusnitida* தாவரத்திற்கான சிறந்த ஊடகம் மற்றும் அதன் தண்டு வெட்டுத் துண்டங்களை பெற்றுக்கொள்வதற்கான பொருத்தமான வளர்ச்சிப் பருவம் ஆகியனவற்றைக் கண்டு பிடித்ததற்கான பரிசோதனையொன்று மாணவர் செயற்திட்டமொன்றாக முன்னெடுக்கப்பட்டு வேர் விடுவதற்கான சிறந்த ஊடகம் மணல் தான் எனவும் தண்டின் பொருத்தமான வளர்ச்சிப் பருவம் அதன் மென்மையான பருவமே என்றும் கண்டறியப்பட்டது.

போகன்விலா வேர் விடுவதற்கான சிறந்த ஊடகம் மற்றும் அதன் தண்டு வெட்டுத் துண்டங்களை பெற்றுக்கொள்வதற்கான பொருத்தமான வளர்ச்சிப் பருவம் ஆகியனவற்றைக் கண்டு பிடித்ததற்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அரைவாசி முதிர்ந்த தண்டுகளே பொருத்தமானவை எனவும் 1 : 1 என்ற விகிதத்திலான மணல் மற்றும் தும்புத் தூள் கலவையே வேர் விடுவதற்கான சிறந்த ஊடகம் என கண்டறியப்பட்டது.

பின்வரும் ஆய்வு முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன.

- *Henckelia humboldtianus* தாவரத்தின் வளர்ச்சியிலும் பூப்பதிலும் ஜிபரெல்லிக் அமிலத்தின் தாக்கம்.
- *Ophiopogon* sp. என்ற அலங்கார இலைத் தாவரத்திற்கான சாடியிடல் ஊடகம் மற்றும் இரு தாவர வளர்ச்சி ஹோர்மோன்களின் தாக்கம்.
- *Dracaena sanderiana* L. தாவரத்தின் இலை நுனி கருகுதல் பிரச்சினையை தீர்ப்பதற்காக போஷனை சமமின்மையை அடையாளம் கண்டமை.
- *Dracaena sanderiana* Var. "Gold" தாவரத்தினைப் பயன்படுத்தி தாவர அலங்காரங்களை உருவாக்குதற்கான பொருத்தமான முறைமைகள் பற்றிய ஆய்வு.
- சீனப் புல் Chinese grass L. தாவரத்தின் இலைகளின் நீளத்தை அதிகரிப்பதில் ஜிபரெல்லிக் அமிலத்தின் தாக்கம் மற்றும் அதற்குப் பொருத்தமான ஊடகம் பற்றிய ஆய்வு.

இ. வெட்டுப் பூக்கள் மற்றும் வெட்டு இலைகள் என்பவற்றின் அறுவடைக்குப் பின்னரான கையாள்கை. இத்துறையில் பின்வரும் ஆய்வு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

- *Zamioculcas zamifolia* என்ற ஏற்றுமதி நோக்கிலான தாவரத்தின் நுண் தாவரங்களை உருவாக்குதல் மற்றும் அதனை துரிதமாக வளர்த்தல் ஆகியவற்றுக்கான முறைமைகள் விருத்தி செய்யப்பட்டன.
- *Cordyline fruticosa* Var. 'Green Ti'என்ற வெட்டு இலைத்தாவரத்தின் காட்சியக ஆயுளை அதிகரிப்பதற்குப் பொருத்தமான பொதியிடல் பொருட்களை மேம்படுத்துதல் அதற்கான கழுவுதல் தீர்வுகள்.
- ஹிபிஸ்கஸ், சீனியா, காட்டுச் சூரிய காந்தி மற்றும் ஜெர்பரா பூக்களுக்கான சிறந்த உலர்த்தல் முறைகளையும் பொருத்தமான உலர்த்தல் காலங்களையும் தெரிதல்.

- *Calathea* sp தாவரத்தின் சாடி ஆயுளை அதிகரிப்பதற்குப் பொருத்தமான பல்வேறு இரசாயனங்கள் பற்றிய ஆய்வு.

- **ஈ. பீடை மற்றும் நோய் முகாமை**

இத்துறையில் பின்வரும் ஆய்வு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன;

- *Gerbera jamesonii* cultivars தாவரத்தின் பீடைக் கட்டுப்பாட்டுக்காக தாவர இல்ல நிலைமையின் கீழ் ஆய்வொன்று கம்பஹாவில் மேற்கொள்ளப்பட்டது.
- நடாத்தப்பட்ட ஆய்வு நிகழ்ச்சித் திட்டமொன்றில் இலங்கையின் மீரிகம பகுதியில் அது. ஒகிட் தாவரங்களைத் தாக்கும் பீடையோன்று இலங்கையின் மீரிகம பகுதியில் அடையாளம் காணப்பட்டது.
- கம்பஹா தாவரவியல் பூங்காவில் டென்றோபியம் வகை ஓகிட் தாவரங்களைத் தாக்கும் கடுமையான நோய் நிலைமையொன்று, குறித்து சப்ரகமுவ பல்கலைக் கழகத்துடன் இணைந்து ஒரு மாணவர் ஆய்வு நிகழ்ச்சித் திட்டமாக முன்னேடுக்கபப்ட்டது. இந்நோய் நிலைமையானது *Fusarium proliferatum* என அடையாளம்
- காணப்பட்டது. இதற்கான காப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன



***Cordyline fruticosa* Var. 'Green Ti' வெட்டு இலைத் தாவரம்**

5.1.1.2. புதிய அலங்காரத் தாவரங்களின் அறிமுகம்

இவ்வருடமும் பூவளர்ப்புத் துறைக்கு பல புதிய தாவரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன, எமது நாட்டிற்கேயுரிய தாவரங்கள் மற்றும் ஓகிட்கள் மற்றும் அந்தூரியம் தாவரங்களின் புதிய வகைகளையும் தேவையான நிறம், விளைச்சல், தரம் மற்றும் நோயெதிர்ப்பு சக்தியுடனான கலப்பினங்களையும் உருவாக்கும் பொருட்டான பல தாவர வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னேடுக்கபப்ட்டன.

சேகரிப்பிலுள்ள அனைத்து உள்நாட்டுத் தாவரங்களதும் பேணுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. பின்வரும் வகையில் தாவர இனப்பெருக்கப் பணிகளும் முன்னெடுக்கபப்ட்டன: 50 சிரிட்டா தாவரங்கள், மற்றும் வெட்டுக்களிலிருந்து பெறப்பட்ட 60 *Impatiance* sp. தாவரங்கள், வெட்டுக்களிலிருந்து பெறப்பட்ட 100 *Osbeckia octandra* தாவரங்கள், விதைகளிலிருந்து பெறப்பட்ட 50 சிரிட்டா மூனி தாவரங்கள் மற்றும் விதைகளிலிருந்து பெறப்பட்ட 25 *Exacum sp.*தாவரங்களும் 20 ஒகிட் விதைப்பைகளும் இரசாயன கூடத்தில் தொற்று நீக்கம் செய்யபப்ட்டன.

அந்துரியம் மற்றும் கெடிலியா ஒகிட் ஆகிய பூச்செடிகளின் இரு கலப்பினங்கள் முறையே அந்துரியம் எச் ஆர் எச் இளவரசி மஹா சக்ரி சிரின்தோம், கெடிலியா எச் ஐ எச் இளவரசி சுகுகோ என, - அவ் இளவரசிகள் இருவரும் அரச தாவரவியல் பூங்காவுக்கு வருகை தந்தமையைக் குறிக்குமுகமாக - பெயரிடப்பட்டன. மேலும் ஒகிட் மற்றும் அந்துரியம் பூச்செடிகளின் 8 கலப்பினங்களை உருவாக்கும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது



Chirita mooni



Osbeckia octandra

### 5.1.1.3. தாவர உற்பத்தி

**அ. பேராதனை பூச்செடியியல் அலகின் தாவர உற்பத்தி**

உயர் ரக உள்ளகத்தாவரங்களையும் அந்துரியம், ஒகிட் மற்றும் ஜெர்பரா தாவரங்களையும் விற்பனைக்கும் பூங்காக்களின் பாவனைக்கும் நில வடிவமைப்பு நோக்கங்களுக்கும் வழங்கும் பொருட்டான தாவர உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் திட்டமிட்டபடி முன்னெடுக்கப்பட்டது. தாவரவியல் பூங்காக்களிலான பூச்செடி விற்பனைக்கான பெறுமானம் சேர்த்தல் நடவடிக்கைகளும் இவ்வருடம் முன்னெடுக்கப்பட்டன.

| | பயிர் | கன்றுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஓக்கிட் | 30,940 |
| 2. | அந்தூரியம் | 4,590 |
| 3. | அந்தூரியம் திசு உருவாக்கக் கன்றுகள் | 1,748 |
| 4 | இலைத் தாவரங்கள் | 37,926 |
| | **மொத்தம்** | **75,204** |

இந்த மொத்தத் தாவர உற்பத்தியிலிருந்து 60% பொது மக்களுக்கு விற்கப்பட்டன அல்லது அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன. எஞ்சியவை தாய்த் தாவரங்களாகவும் கண்காட்சித் தாவர உற்பத்திக்கும் நாற்றுமேடைகளின் தாவர சேகரிப்பை பேணவும் பயன்படுத்தப்பட்டன.

**ஆ. கம்பஹா பூச்செடியியல் அலகின் தாவர உற்பத்தி**

அந்துரியம், ஜெர்பரா மற்றும் ஒகிட் (டென்ரோபியம்) நுண் தாவரங்களின் உருவாக்கத்துக்கான திசு உருவாக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஒகிட், அந்துரியம், பன்னத் தாவரங்கள், ஜெர்பரா மற்றும் நீர்த் தாவரச் சேகரிப்புக்கள் ஆகியவற்றுக்கான பொதுப் பேணுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஒகிட் விதைகள் மற்றும் திசு உருவாக்க நடைமுறைகளால் 615 திரள் சாடிகள் மற்றும் 2” சாடிகளில்

வளர்க்கப்பட்ட 1528 தாவரங்கள் ஆகியன உருவாக்கப்பட்டன. மேலும் இரசாயன கூடத்தினுள் உருவாக்கப்பட்ட 7740 அந்துரியம் கன்றுகள் சூழல் தகைமையடையச் செய்யப்பட்டன.

**இ. மிரிஜ்ஜவில உலர்வலய தாவரவியல் பூங்காவின் பூச்செடியியல் அலகின் தாவர உற்பத்தி**

அந்துரியம், ஒகிட் மற்றும் இலைத் தாவரங்களைப் பயிரிடவென அமைக்கப்பட்ட வலை இல்லத்தில் பயிரிடல் மற்றும் பேணுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. தற்போதைய சேகரிப்புக்கு 400 அந்துரியம். 50 ஒகிட், 65 கல்லித் தாவரங்கள், 600 கோலியாஸ், 05 டிலன்சியா, 3800 இலைத்தாவரங்கள், போகன்விலா மற்றும் வேறு அலங்காரத் தாவரங்கள் இணைக்கப்பட்டன. மேலும் எமது நாட்டிற்குரிய 10 ஒகிட்களும் , 10 வெண்டா டெசெல்லாடா தாவரங்களும் , 38 டிலன்சியா வகைகளும் , 07 பனைகளும் , 20 நீர்த் தாவரங்களும், 73 குரோட்டன்களும் 65 புதிய கள்ளித் தாவர வகைகளும் மற்றும் 43 புதிய இலைத் தாவரங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும் மேற்படி பல தாவர வகைகளும் மீள் சாடியிடப்பட்டன.

**ஈ. விற்கப்பட்ட / விடுவிக்கப்பட்ட தாவரங்கள் மற்றும் பூக்கள்**

| **பூச்செடியியல் அலகு** | **பயிர்** | **வகைகள்** | **விடுவிக்கப்பட்ட தாவரங்கள்** | **விற்கப்பட்ட தாவரங்கள் மற்றும் பூக்கள்** |
|---|---|---|---|---|
| அரச தாவரவியல் பூங்கா, பேராதனை | இலைத் தாவரங்கள் | சாடிகள் மற்றும் பொலி பைகள் | 614 | 20,743 |
| | ஒகிட் | திரள் சாடிகள் (தாவரங்களின் எண்ணிக்கை ) | 440 | 5,020 |
| | | 2” சாடிகள் | - | 4,314 |
| | அந்துரியம் | கன்றுகள் | - | 2,923 |
| | | மேரிக்லோன் கன்றுகள் | - | 1,452 |
| | | பூக்கள் | 289 | 2,411 |
| | ஜெர்பரா | வளர்ந்த தாவரங்கள் | - | 35 |
| | | பூக்கள் | | 1,073 |
| கம்பஹா தாவரவியல் பூங்கா | ஒகிட் | திரள் சாடிகள் (தாவரங்களின் எண்ணிக்கை ) | - | 2640 |
| | | 2” சாடிகள் | - | 456 |
| | அந்துரியம் | தாவரங்கள் | - | 1435 |
| | **மொத்தத் தாவரங்கள் / பூக்கள்** | | **1,054 தாவரங்கள் 289 பூக்கள்** | **39,018 தாவரங்கள் 3,484 பூக்கள்** |

**5.1.1.4. நாடளாவிய தேசிய பூச்செடியியல் விரிவாக்க நிகழ்ச்சித் திட்டம் (சுவஹஸ் மல்)**

சுவஹஸ் மல் நிகழ்ச்சித் திட்டமானது பூச்செடியியல் பயிர்களை வளர்ப்போரை விவசாய அமைப்புக்களாக / சங்கங்களாக ஒழுங்குபடுத்துவதற்காக 2005 ம் ஆண்டு ஆரம்பிக்கபப்ட்டது. அவர்களுக்கு பயிற்சிகளை வழங்கி சந்தைப்படுத்தல் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்து அவர்களது வருமானம் ஈட்டல் இயலுமையை அதிகரிப்பது இதன் நோக்கமாகும்.

இதன் கீழ் 139 பூ வளர்ப்போர் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு கீழ்க்கட்டுமான அபிவிருத்திக்கான பொருட்களும் உயர் தரம் வாய்ந்த தாய்த் தாவரங்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. மேலும் அவர்களுக்கு தொடர் தரிசிப்புக்கள் மூலம் தொழில்நுட்ப அறிவு வழங்கப்படுவதோடு தெரிவு செய்யப்பட்ட தலைப்புக்களில் செயலமர்வுகளும் கருத்தரங்குகளும் நடாத்தப்படுகின்றன.

இவர்களது வருமானத்தை அதிகரிக்குமுகமாக மாவட்ட மட்ட பெரிய கண்காட்சிகளும் பிராந்திய மட்ட சிறு கண்காட்சிகளும் ஏற்பாடு செய்யபப்ட்டன.

**அ. பூச்செடியியல் விவசாய சங்கங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்**

நாட்டின் பல பாகங்களிலும் பூச்செடியியல் துறையில் ஈடுபடுவோரை ஒன்றிணைத்து இவ்வருடம் 39 புதிய பூ வளர்ப்போர் சங்கங்கள் அமைக்கப்பட்டன. சுவஹஸ் மல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு இவ்வருடம் ஒவ்வொரு மாவட்டத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்களின் எண்ணிக்கை

| மாவட்டம் | சங்கங்களின் எண்ணிக்கை | மாவட்டம் | சங்கங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| கண்டி | 11 | கொழும்பு | 09 |
| நுவரெலியா | 13 | கம்பஹா | 28 |
| மாத்தளை | 08 | அனுராதபுர | 01 |
| பதுளை | 08 | இரத்தினபுரி | 10 |
| அம்பாந்தோட்டை | 07 | கேகாலை | 16 |
| மாத்தறை | 02 | புத்தளம் | 06 |
| காலி | 02 | குருநாகல் | 06 |
| களுத்துறை | 12 | **மொத்தம்** | **139** |

இச்சங்கங்களின் கீழ் பூ வளர்ப்போர் 2,780 பேர் தொழில்நுட்ப ரீதியாகவும் நிதியுதவிகள் மூலமும் பலப்படுத்தப்பட்டன்ர்.

**ஆ. ஒருங்கிணைக்கப்பட்ட விவசாயிகளை பலப்படுத்துதல்**

சிறு மற்றும் நடுத்தர பூ வளர்ப்போர் பயிற்சி நிகழ்ச்சிகள், செயலமர்வுகள் மூலம் தொழில்நுட்ப அறிவும் நாற்று மேடை தரிசிப்புக்கள் மூலம் பிரச்சினைகளுக்கான தீர்வு ஆலோசனைகளும் வழங்கப்பட்டு மேலும் பொருட்களும் உபகரணங்களும் பூச்செடியியல் பிரசுரங்களும் வழங்கப்பட்டு பலப்படுத்தப்பட்டனர்.

<u>செயலமர்வுகள்</u>

பின்வரும் வகையில் பல்வேறு மாவட்டங்களிலும்

| மாவட்டம் | செயலமர்வுகளின் எண்ணிக்கை | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|
| கண்டி | 01 | 90 |
| நுவரெலியா | 01 | 13 |
| கேகாலை | 14 | 618 |
| புத்தளம் | 02 | 124 |
| கம்பஹா | 04 | 365 |
| மாத்தளை | 02 | 115 |
| அம்பாந்தோட்டை | 01 | 100 |
| மொத்தம் | **25** | **1,425** |

செயலமர்வுகள் நடாத்தப்பட்டன:

**<u>நாற்றுமேடை தரிசிப்புக்கள்</u>**

| மாவட்டம் | தரிசிக்கப்பட்ட நாற்றுமேடைகள் |
|---|---|
| கண்டி | 38 |
| நுவரெலியா | 63 |
| கேகாலை | 280 |
| கம்பஹா | 475 |
| அம்பாந்தோட்டை | 49 |
| மாத்தளை | 32 |
| குருநாகல் | 55 |
| மொத்தம் | **992** |

இதற்கு மேலதிகமாக உரிய இடங்களுக்குச் சென்று தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டதோடு, மாதாந்தம் தொடர் கூட்டங்கள் நடாத்தப்பட்டு பூ வளர்ப்போரது பிரச்சினைகளுக்கு தீர்வுகள் வழங்கப்பட்டன. இவ்வருடம் கண்டி, மாத்தளை, கம்பஹா, கேகாலை, களுத்துறை, நுவரெலியா, அம்பாந்தோட்டை, குருநாகல், கொழும்பு மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் 576 மாதாந்தக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.


குறுங்கால பயிற்சி அமர்வுகள்


“பொன்சாய்” பற்றிய செயலமர்வு


வளர்ப்பாளர் ஒருவரது நாற்று மேடை

இதற்கு மேலதிகமாக, (வல்பிட, மரதகஹமுல்ல, கனேமுல்ல, ஹேனேகம, மினுவாங்கொட ஆகிய பிரதேசங்களில் ) “ லிய அபிமன் ” நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் **34** அந்துரியம் நாற்றுமேடைகள் தரிசிக்கபப்ட்டு அவை குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

வெவ்வேறு மாவட்டங்களைச் சார்ந்த சுவஹஸ் மல் சங்கங்களின் அங்கத்தவர்கள் [ கேகாலை (06), கொழும்பு (01), மாத்தளை (01) மற்றும் அம்பாந்தோட்டை (04)] பூ விற்பனைக் கண்காட்சிகள், வேறு நாற்று மேடைகள் என்பவற்றுக்கு 12 களப் பயணங்களில் அழைத்துச் செல்லப்பட்டு புதிய பயிரிடல் உபகரணங்களைக் கொள்வனவு செய்யவும் அதனூடு தமது பூ வளர்ப்பினை மேம்படுத்திக்கொள்ளவும் வழியமைத்துக் கொடுக்கப்பட்டது.

**<u>பூச்செடியியல் பயிற்சி</u>**

அந்துரியம், ஒகிட், ஜேர்பரா மற்றும் வெட்டு இலைகள் பற்றிய குறுங்கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பூ வளர்ப்போரை இலக்காகக் கொண்டு இவ்வருடமும் நடாத்தப்பட்டன.

**பேராதனை, பூச்செடியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் நடாத்தப்பட்ட அத்தகைய குறுங்கால பயிற்சிகள் பற்றிய விபரம்:**

| விடயம் | காலம் | வகுப்புக்களின் எண்ணிக்கை | பங்கு பற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஒகிட் வளர்ப்பு | 01 நாள் | 46 | 1,590 |
| | பிரயோகப் பயிற்சி | 30 | 462 |
| | வெளிக்கள | 07 | 582 |
| இலைத் தாவரங்கள் | 01 நாள் | 39 | 1,240 |
| | பிரயோகப் பயிற்சி | 37 | 437 |
| | வெளிக்கள | 06 | 345 |
| அந்துரியம் | 01 நாள் | 54 | 2,182 |
| | பிரயோகப் பயிற்சி | 19 | 120 |
| | வெளிக்கள | 10 | 781 |
| ஜேர்பரா வளர்ப்பு | 01 நாள் | 16 | 386 |
| | வெளிக்கள | 01 | 35 |
| திசு உருவாக்கம் | 05 நாட்கள் | 09 | 63 |
| அறுவடைக்குப் பின்னரான நடவடிக்கைகள் | 01 நாள் – வெளிக்கள | 01 | 35 |
| பொன்சாய் | 01 நாள் | 03 | 120 |
| | வெளிக்கள | 03 | 125 |
| பெறுமானம் சேர்க்கபப்ட்ட உற்பத்திகள் | 01 நாள் | 03 | 75 |
| | வெளிக்கள | 02 | 105 |
| மொத்தம் | | **286** | **8,683** |

**இதற்கு மேலதிகமாக பேராதனை, பூச்செடியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் பின்வரும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.**

- ஒகிட், அந்துரியம், ரோசா, நாற்று மேடை முகாமை மற்றும் இலைத் தாவரங்கள் பற்றிய வகுப்புக்கள் **64** மாணவர்களுக்கு தமிழ் மொழி மூலம் நடாத்தப்பட்டன,
- பேராதனை, அரச தாவரவியல் பூங்காவில் மூன்று மாத பயிற்சி நெறியைத் தொடரும் மாணவர்களுக்கு பூ அலங்காரங்கள், அறுவடைக்குப் பின்னரான கையாள்கை, பீடை மற்றும் நோய் முகாமை பற்றிய விரிவுரைகள் நடாத்தபப்ட்டன.

- மத்திய மாகாணத்தைச் சேர்ந்த 100 பாடசாலை ஆசிரியர்களுக்கு பூ அலங்காரங்கள், டேரேரியம், உலர் பூ உற்பத்தி மற்றும் உலர் பூக்களிலிருந்து கைப்பணிப் பொருட்கள் செய்தல் ஆகியன பற்றி இரு பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தபப்ட்டன.
- மாகாணக் கல்வி அமைச்சின் பணிப்பாளர்கள் மற்றும் பிரதிப் பணிப்பாளர்கள் 30 பேருக்கு அந்துரியம் வளர்ப்புப் பற்றிய பயிற்சி அமர்வொன்று நடாத்தபப்ட்டது.
- 35 பேருக்கான டிரசீனா சண்ட்ரியானா வளர்ப்புப் பற்றிய அமர்வொன்று வெல்கொல்ல பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டது. மேலும் அவ்வாறான அமர்வொன்று சமுர்த்தி உதவி பெறுவோர்களான 50 பேருக்கு கேகாலையில் நடாத்தபப்ட்டது.
- வெட்டு இலைத் தாவரங்கள் பற்றிய பயிற்சி அமர்வொன்று 60 பேருக்கு மாத்தளையில் நடாத்தபப்ட்டது. மத்திய வங்கியின் மாகாண அலுவலகம் அதனை ஏற்பாடு செய்தது.
- பொம்புவெல சேவைக்கால பயிற்சி நிறுவனத்தில் இலைத் தாவரங்கள், டிரசீனா சண்ட்ரியானா மற்றும் ஜேர்பரா வளர்ப்புப் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகள் முறையே விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த 80, 60 மற்றும் 45 அதிகாரிகளுக்கு நடாத்தப்பட்டன.
- மகரந்தச் சேர்க்கை உயிரியல் மற்றும் வளர்த்தல் பற்றிய பிரயோக செய்துகாட்டல்கள் மற்றும் அறிமுக விரிவுரைகள் பேராதனை பல்கலைக்கழக தாவரவியல் துறை மாணவர்கள் 38 பேருக்கு நடாத்தப்பட்டன.. மேலும் 12 மாணவர்களுக்கும் 29 ஆசிரியர்களுக்கும் திசு உருவாக்கம் பற்றிய விரிவுரைகள் நடாத்தப்பட்டன..
- பேராதனை பல்கலைக்கழக இணைந்த சுகாதார விஞ்ஞானத் துறை மற்றும் குண்டசாலை விவசாயக் கல்லூரி ஆகியவற்றின் மாணவர்கள் 44 பேருக்கு பூச்செடியியல் பயிர் வளர்ப்புப் பற்றிய பிரயோக செய்துகாட்டல்கள் மற்றும் அறிமுக விரிவுரைகள் நடாத்தப்பட்டன..
- மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் நிலவடிவமைப்பு மற்றும் கட்டிட நிர்மாணத்துறை பட்டப் படிப்பைத் தொடரும் மாணவர்கள் 40 பேருக்கு இலைத் தாவரங்கள் பற்றிய விரிவுரையொன்று நடாத்தப்பட்டது. மேலும் 44 மாணவர்களுக்கு திசு உருவாக்கம் பற்றிய விரிவுரையொன்று நடாத்தப்பட்டது..
- அலங்காரத் தாவர வளர்ப்புப் பற்றிய அறிமுகமொன்று ஹட்டன் பிரதேசத்தில் 25 நபர்களுக்கு வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்றாக நடாத்தபப்ட்டது. மேலும் வலபனே பிரதேச செயலகத்தில் பூச்செடியியல் கைத்தொழிலில் முதலீடு செய்தல் பற்றிய அறிமுகமொன்று 80 நபர்களுக்கு நடாத்தப்பட்டது..
- அந்துரியம் மற்றும் அலங்காரத் தாவர வளர்ப்புப் பற்றிய அறிமுகமொன்று கொத்மலை பிரதேசத்தில் 50 நபர்களுக்கு, பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடாத்தபப்ட்டது.

**ஹக்கல தாவரவியல் பூங்காவில் நடாத்தப்பட்ட குறுங்கால பயிற்சிகள் பற்றிய விபரம் ;**

| நிகழ்ச்சித் தலைப்பு | பங்குபற்றியோர் |
|---|---|
| ஜேர்பரா மற்றும் ரோசா வளர்ப்பு | தியத்தலாவை இராணுவ முகாமிலிருந்து 12 பேர் |
| ரோசா வளர்ப்பு | உயர் தர மாணவர்கள் 05 பேர் / 01 தனி நபர் |
| | நதுன்கமுவவிசக் சேர்ந்த பூ வளர்ப்போர் 22 பேர் |
| | கல்பாலம விவசாய கல்லூரியின் டிப்ளோமா மாணவர்கள் 20 பேர் |
| | பெலவத்த விவசாயக் கல்லூரியின் டிப்ளோமா மாணவர்கள் 52 பேர் |
| | தேசிய பயிலுனர் அதிகார சபை மாணவர்கள் 15 பேர் |

| நிகழ்ச்சித் தலைப்பு | பங்குபற்றியோர் |
|---|---|
| ரோசா, கிரிசாந்திமம் மற்றும் ஜேர்பரா வளர்ப்பு | பூ வளர்ப்போர் 21 பேர் |
| | பூ வளர்ப்பாளர் ஒருவர் |
| | 39 கிராமத்தவர்கள் |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான 72 விவசாயிகள் |
| | நுவரேலியா மாவட்டச்செயலக பூ வளர்ப்போர் 97 பேர் |
| கிரிஷாந்திமம் வளர்ப்பு | சுவஹஸ் மல் சங்கங்களின் கீழான பூ வளர்ப்போர் 13 பேர் |
| வெட்டு இலைகள் வளர்ப்பு | க,பொ.த. உயர் தர மாணவர் ஒருவர் |
| கார்னேஷன் வளர்ப்பு | பூ வளர்ப்போர் இருவர் |
| ஜேர்பரா வளர்ப்பு | பூ வளர்ப்போர் 11 பேர் |
| தாவர நாற்றுமேடை மற்றும் உற்பத்தி | வெலிமட பிரதேச செயலக திவிநெகும விவசாயிகள் 92 பேர் |
| ஜேர்பரா, அந்துரியம் | வெலிமட பிரதேச செயலக திவிநெகும விவசாயிகள் 55 பேர் |

இதற்கு மேலதிகமாக கம்பஹா தாவரவியல் பூங்காவிலும் பின்வரும் பயிற்சி நெறிகள் நடாத்தபப்ட்டன:

- ஒகிட், அந்துரியம், இலைத் தாவரங்கள் மற்றும் ஜேர்பரா பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகள் முறையே 498, 418, 267, 86 பங்கேற்போருக்கு நடாத்தப்பட்டன,
- திவிநெகும திட்டத்தின் கீழ் 122 பேருக்கான இலைத் தாவரங்கள் மற்றும் டிரசீனா சண்ட்ரியானா வளர்ப்புப் பற்றிய பயிற்சியொன்று நடாத்தப்பட்டது. மேலும் சமுர்தி நன்மை பெறுவோர் 84 பேருக்கு ஓகிட் வளர்ப்புப் பற்றிய நிகழ்ச்சியொன்றும் நடாத்தப்பட்டது.
- லலித் அதுலத் முதலி இளைஞர் பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த பயிலுனர்கள் 25 பேருக்கு பல்வேறு பூச்செடியியல் பயிர்களின் வளர்ப்புப் பற்றிய நிகழ்ச்சியொன்று நடாத்தப்பட்டது.
- அனுராதபுர மாவட்டத்தில் பூ வளர்ப்போர்கள் 250 பேருக்கு பூச்செடியியல் பயிர்களின் வளர்ப்புப் பற்றிய நிகழ்ச்சியொன்று நடாத்தப்பட்டது.
- மீரிகம பிரதேச செயலகத்தில் 250 பேருக்கு பூச்செடியியல் அந்துரியம் வளர்ப்புப் பற்றிய நிகழ்ச்சியொன்று நடாத்தப்பட்டது.
- ஏற்றுமதி அபிவிருத்தித் திணைக்கள அலுவலர்கள் 20 பேருக்கு ஓகிட் மற்றும் டிரசீனா சண்ட்ரியானா வளர்ப்புப் பற்றிய பயிற்சி நிகழ்ச்சியொன்று காலியில் நடாத்தப்பட்டது.
- எதிர்வரும் "தேசத்துக்கு மகுடம்" கண்காட்சிக்காக மனித வள நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் அளவ்வை பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் ஓகிட், அந்துரியம் மற்றும் இலைத்தாவர வளர்ப்புப் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகள் முறையே 200, 71 மற்றும் 50 பங்கேற்பாளர்களுக்கு நடாத்தப்பட்டன.

மிரிஜ்ஜவில, உலர் வலய தாவரவியல் பூங்காவில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள்:

- ஓகிட், அந்துரியம், அலங்காரத் தாவரங்கள் மற்றும் நாற்று மேடை முகாமைத்துவம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகள் முறையே 430, 70, 80 மற்றும் 140 பங்கேற்பாளர்களுக்கு நடாத்தப்பட்டன.
- வர்த்தக ரீதியிலான பூச்செடியியல் பயிர்கள் வளர்ப்புப் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகள் 453 பங்கேற்பாளர்களுக்கு நடாத்தப்பட்டன.
- விவசாயத் திணைக்கள அதிகரிகள் 40 பேருக்கு ஓகிட், அந்துரியம் மற்றும் இலைத்தாவர வளர்ப்புப் பற்றிய பயிற்சியொன்று நடாத்தப்பட்டது.
- பூ வளர்ப்போருக்கான மேற்படி இயலுமை விருத்தி நிகழ்ச்சிகளுக்கு மேலதிகமாக, ஜூலை மாதம் 18 ம் திகதி பேராதனை, அரச தாவரவியல் பூங்காவின் கற்கைகள் நிலைய கேட்போர் கூடத்தில், சுவஹஸ் மல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான தற்போதைய பணிகளை மேம்படுத்துதல் மற்றும் அதன் எதிர்காலத் திட்டங்கள் பற்றி சம்பந்தப்பட்டவர்களுடன் ஒரு பயன் மிக்க கலந்துரையாடல் நடத்தப்பட்டது. இதில் பூ வளர்ப்போர் மற்றும் அதிகாரிகள் 150 க்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர். யுனிபவர் தனியார் நிறுவனத்துடன் இணைந்து இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

இ. பொருட்கள், உபகரணங்கள், மற்றும் கீழ்க்கட்டுமான வசதிகளை வழங்குதல்

<u>தரம் வாய்ந்த தாய்த் தாவரங்களை வழங்குதல்</u>

சுவஹஸ் மல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல்வேறு பூ வளர்ப்போர் சங்கங்களையும் சார்ந்த அங்கத்தவர்களுக்கு விநியோகிக்கவென தாய்த் தாவரங்கள் இறக்குமதி செய்யபப்ட்டன. தரம் வாய்ந்த கன்றுகளை வழங்கி பூ வளர்ப்போரது வருமானங்களை உயர்த்துவது இதன் நோக்கமாகும். அதற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 5.7 மில்லியன்களாகும்.

இவ்வகையில் இந்தியாவிலிருந்து 12,000 ஜேர்பரா கன்றுகளும் 10,000 கார்னேஷன் கன்றுகளும் இறக்குமதி செய்ய்ப்பட்டு நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களைச் சேர்ந்த பூ வளர்ப்போருக்கும் தாய்லாந்திலிருந்து 33,400 ஓகிட் கன்றுகள் தருவிக்கபட்டு நாடளாவிய ரீதியில் பூ வளர்ப்போருக்கு விநியோகிக்கப்பட்டதோடு பேராதனை, கம்பஹா, அவிசாவலை,மற்றும் அம்பாந்தோட்டை பூங்காக்களின் சேகரிப்புக்களும் மேம்படுததப்பட்டன.

<u>நிழல் வலை விநியோகம்</u>

கீழ்க்கட்டுமான அபிவிருத்திக்கான ஊக்குவிப்பாக, 50% மற்றும் 70% நிழல் வலைகளை சுவஹஸ் மல் சங்க அங்கத்த்வரிடையே பகிர்ந்தளிக்கும் பணி இவ்வருடமும் முன்னெடுக்கப்பட்டது. கொழும்பு, இரத்தினபுரி, அனுராதபுரம், மாத்தளை, காலி, மாத்தறை, குருநாகல், கேகாலை, கண்டி, மற்றும் களுத்துறை மாவட்டங்களைச் சேர்ந்த 32 சுவஹஸ் மல் சங்கங்களுக்கு மொத்தமாக 25,341 சதுர மீட்டர் நிழல் வலை விநியோகிக்கபப்ட்டது.



**<u>2011ம் ஆண்டின் வெட்டு இலைகள் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் பற்றிய மதிப்பீடு.</u>**

வெட்டு இலை பயிரிடலை ஊக்குவிப்பதற்காக மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கை பற்றிய மதிப்பீட்டினை மேற்கொள்வதற்காக இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கபபட்ட மதிப்பீடுகள் இவ்வருடமும் முன்னேடுக்கப்பட்டன. கம்பஹா (80) மற்றும்

கேகாலை (14) மாவட்டங்களில் மொத்தம் 94 நாற்று மேடைகள் தரிசிக்கப்பட்டு தேவையான உபகரணாங்களும் வழங்கப்பட்டன.




கேகாலையில் அமைந்துள்ள, இத்திட்டத்தின் கீழ் உதவி பெறும் இரு நாற்றுமேடைகள்

**ஈ. சந்தைப்படுத்தல் உதவி**

பூ வளர்ப்போர்களது சந்தைப்படுத்தல் இயலுமையை மேம்படுத்தும் பொருட்டு சிறியளவிலான மற்றும் மாவட்ட மட்ட கண்காட்சிகளும் தாவார விற்பனைகளும் பரவலாக ஏற்பாடு செய்யப்பட்டன. அவற்றின் விபரம் வருமாறு:

| | மாவட்டம் | மாவட்ட மட்ட பெரிய கண்காட்சிகள் | சிறிய கண்காட்சிகள் |
|---|---|---|---|
| 1. | கண்டி | 01 | 10 |
| 2. | குருநாகல் | 01 | 03 |
| 3. | கேகாலை | 02 | 44 |
| 4. | புத்தளம் | 01 | - |
| 5. | கம்பஹா | - | 38 |
| 6. | களுத்தறை | 03 | - |
| 7. | மாத்தளை | 02 | - |
| 8. | அனுராதபுரம் | - | 02 |
| 9. | அம்பாந்தோட்டை | 02 | 08 |
| 10. | இரத்தினபுரி | - | 02 |
| 11. | கொழும்பு | - | 02 |
| 12. | பதுளை | - | 01 |
| | **மொத்தம்** | **12** | **110** |

மாத்தளை மாவட்டத்தின் பலாபத்வெல மற்றும் உக்குவளை சுவஹஸ் மல் சங்க அங்கத்தவர்கள் திணைக்களத்தின் உதவியோடு இரண்டு நிரந்தர விற்பனை நிலையங்களை அமைத்துக்கொண்டனர். இதன் மூலம் இரு சங்கங்களையும் சேர்ந்த முறையே 17 மற்றும் 20 அங்கத்தவர்கள் நன்மையடைவர்.




மலர்க் கண்காட்சிகள்

### 5.1.2. *தாவர உயிரியல் பல்வகைமை ஆராய்ச்சி*

#### 5.1.2.1. இலங்கையின் தாவர வளங்களை கண்டறிந்து ஆவணப்படுத்துதல்


வெளிவாரிப் பேணுகை தேவைப்படும் தாவர வகைகளைச் சேகரிக்கவும் உயிரியல் பல்வகைமை பேணல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பொருளாதார இயலுமை கொண்ட தாவரங்களை பயனுறுதி வாய்ந்த வகையில் பயன்படுத்துவதனை அடையாளம் காணவும் தாவர வகைகளின் வாழிடங்களை மதிப்பீடு செய்து அவற்றை மீள உருவாக்கவும் மீள அறிமுகம் செய்யவும் பல தாவரக் கண்டறிதல் நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. தாவர வளங்கள் குறித்த ஆவணப்படுத்தலும் இதன் ஒரு அங்கமாக மேற்கொள்ளபப்ட்டது.



**ஹப்புத்தளை தங்கமலை பாதுகாக்கப்பட்ட வனத்திலான கண்டாய்வு**

**அ. தாவரவியல் கள ஆய்வு**

தேசிய தாவரக்கயத்தால் ஏனைய அலகுகளுடன் இணைந்து தாவரவியல் கள ஆய்வொன்று இவ்வருடமும் முன்னெடுக்கப்பட்டது. உலர் மற்றும் ஈர வலயங்களின் அழிவுறும் அச்சுறுத்தலுக்குட்பட்டுள்ள தாவர வகைகளைக் கண்டறிந்து சேகரிப்பதே அதன் பிரதான நோக்கமாகும். உயிரியல் பல்வகைமை பேணல் மற்றும் வெளிவாரிப் பேணுகை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதும் பல்வேறு கைத்தொழில்கள் சார்ந்து பொருளாதார இயலுமை கொண்ட தாவரங்களை அடையாளம் காணலும் இதன் மூலம் எய்தப்படுகிறது.



*Sonerila pumila ; சீதா எலிய பாதுகாக்கபபட்ட வனத்தில் காணப்படும் அழிவுறும் ஆபத்தை எதிர் நோக்கியுள்ள தாவரம்*

இதாவர ஆய்வின் போது 30 களப்பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு 948 பூக்கும் தாவரங்களதும் 14 பன்னத்தாவரங்களதும் 240 பாசித்தாவரங்களதும் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. தாவர அடையாளம் காணல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அழிவுறும் அதி ஆபத்துக்குரிய 05 தாவரங்களும், அழிவுறும் ஆபத்துக்குரிய 29 தாவரங்களும், அழிவுறும் ஆபத்துக்குட்படக்கூடிய 50 தாவரங்களும் அழிவுறும் ஆபத்தை அண்மித்துள்ள 35 பூக்கும் தாவரங்களும் அடையாளம் காணப்பட்டன. தேவையான வெளிவாரிப் பேணுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு இவ்வாய்வு அடுத்த வருடமும் முன்னெடுக்கப்படும்.

*கள ஆய்வுப் பயணங்கள் பற்றிய விபரம் வருமாறு:*

| இடம் | சேகரிக்கப்பட்ட மாதிரிகள் | | |
|---|---|---|---|
| | வித்துமூடியுளிகள் | பன்னத்தாவரங்கள் | பாசித்தாவரங்கள் |
| ஹந்தான (2 களப் பயணங்கள் ) | 32 | | |
| பொபெள்ள - நாவுல (2 களப் பயணங்கள் ) | 105 | | |
| நகல்ஸ் பாதுகாப்பு வன கொபர்ட்ஸ் இடைவெளி | 17 | | |
| தங்கமலை பாதுகாப்பு வனம் | 31 | | |
| ஹக்கல & சீதாஎலிய | 20 | | |
| தங்கப்புவ (3 களப் பயணங்கள் ) | 67 | | 45 |
| தொலசஸ்பாகே வின்சர் வனம் | 20 | 1 | 15 |
| வாடகெல்லே - கலாபொக்க | 28 | | 30 |
| ரிவஸ்டன் n (2 களப் பயணங்கள் ) | 22 | | |
| வில்ட்ஷயர் வானம் - மாத்தளை | 7 | | |
| தொலஸ்பாகே[ ராஹல்கல | 14 | | |
| ஹுன்னஸ்கிரிய | 10 | | 15 |
| கன்னேலிய & ஹினிதும | 39 | | |
| கிகிளியாமான | 33 | **2** | 30 |
| புலத்கொஹுபிடிய - யடியந்தொட | 24 | | 10 |
| சிங்கராஜ வனம் | 55 | | |
| மொரபிடிய, களுத்துறை | 33 | | |
| செவன் வேர்ஜின் மலைகள் (2 களப் பயணங்கள் ) | 79 | **1** | 30 |
| தொடுளுகல | 62 | | 65 |
| உடதும்பர | 30 | | |
| மிரிஜ்ஜவில உலர் வலய தாவரவியல் பூங்கா | 22 | | |
| ஹோர்டன் சமவெளி | 21 | | |
| களுகங்கை அபிவிருத்தித் திட்டம் (2 களப் பயணங்கள்) | 177 | **10** | |
| **மொத்தம்** | **948** | **14** | **240** |

**ஆ. ஏனைய தாவரக் கண்டாய்தல் நடவடிக்கைகள்**

2012ம் ஆண்டில் மொரகஹகந்த நீர் மின்சார உற்பத்திச் செயற்திட்டப் பிரதேசத்தில் செய்யபப்ட்ட தாவரக் கண்டாய்தைன் போது சேகரிக்கப்பட்ட தாவரங்களை அடையாளம் காணும் பணி தேசிய தாவரக்கயத்தால் முன்னெடுக்கப்பட்டது. சேகரிக்கப்பட்ட 169 தாவரங்களில் 52 மாதிரிகள் அடையாளம் காணப்பட்டன. அழிவுறும் ஆபத்துக்குரிய 03 தாவரங்களும், அழிவுறும் ஆபத்துக்குட்படக்கூடிய 05 தாவரங்களும் அழிவுறும் ஆபத்தை அண்மித்துள்ள 12 தாவரங்களும் பதிவு செய்யப்பட்டன.

களஆய்வுப் பயணங்களின் போது தேசிய தாவரக்கயத்தால் படம் பிடிக்கப்பட்ட வனப் பூக்கள் மற்றும் வீதியோர மரங்கள் அடையாளம் காணப்பட்டு "இலங்கையின் வனப் பூக்கள்" மற்றும் "இலங்கையின் வீதியோரங்களில் பொதுவாகக் காணப்படும் மரங்கள்" ஆகிய இரு புத்தகங்கள் அமைக்கப்பட்டன.

மிறிஜ்ஜவில உலர் வலய தாவரவியல் பூங்காவினால் மொரகஹகந்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஐந்து நாள் கள ஆய்வுப் பயணத்தின் போது 80 வகைகளைச் சேர்ந்த 890 மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அவற்றை அடையாளம் காணும் பணிகள் தொடர்கின்றன. மேலும் அவற்றை நாற்றுமேடைகளில் இனப்பெருக்கம் செய்து மரச்சேகரிப்பில் பின்னர் இணைக்கவும் உத்தேசிக்கபப்ட்டுள்ளது.

“இலங்கையின் மலையுச்சித் தாவரங்களை கண்டறியும் ஆய்வின்” கீழ் நமுனுகுல, பிதுரங்கல, மந்தாரம் நுவர மற்றும் லூல்கந்துர ஆகிய பிரதேசங்களில் களப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு 225 பூக்கும் தாவரங்களும் 2 பன்னத்தாவரங்களும் 140 பாசித் தாவரங்களும் சேகரிக்கபப்ட்டன. அவற்றுள் 27 பூக்கும் தாவரங்களும் 50 பாசித் தாவரங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன.





***Bryum argenteum*** **Hedw. (Bryaceae)**

***Hypopterygium flavolimbatum*** **Muell.Hal. (Hypopterygiaceae)**

**களப் ... சேகரிக்கப்பட்ட அழகிய பாசித் தாவரங்கள்**







தேசிய தாவரக்கயத்தால் ஹந்தான பிரதேசத்தில்

***Christisonia tricolor*****; ரிவஸ்டன் பகுதியின் ஆபத்துக்குட்பட்டுள்ள தாவரம்**

***Exacum pedunculatum*** **L. பொபெள்ள நாவுல பகுதியின் அதி ஆபத்துக்குட்பாட்டுள்ள தாவரம்**

சேகரிப்பதற்காக இரண்டு களப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையில் பிரம்புத் தாவரங்களை விதை மூலமாக இனப்பெருக்கம் செய்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் தாவர உருவாக்கம் என்பன பற்றிய ஆய்வின் கீழ் விதை மூலமான இனப்பெருக்கத்துக்கான பரிசோதனை செய்யபப்பட்டது.

நாவுல, பொபெல்ல பிரதேசத்தில், அழிவுறும் அதி ஆபத்துக்குட்பட்டுள்ள *Exacum pedunculatum* L தாவரம் காணப்படும் பகுதியில் அது பற்றிய சூழலியல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கையொன்றினை மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு வழங்கும் பொருட்டு தேசிய தாவரக்கயத்தால் நன்கு களப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தொடுளுகல, உடதும்பர, களுகங்கை, லூல்கந்துர ஹக்கல, ஆகிய பகுதிகளில் அரச தாவரவியல் பூங்காவினால் 06 களப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு 121 தாவர வகைகள் சேகரிக்கப்பட்டன. அவற்றை அடையாளம் காணும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு அழிவுறும் ஆபத்துக்கு உட்படக் கூடிய 11 வகைகளும் அழிவுறும் ஆபத்தை நெருங்கியுள்ள 07 வகைகளும் அழிவுறும் ஆபத்துக்கு உட்பட்டுள்ள 03 வகைகளும் அடையாளம் காணப்பட்டு அவற்றை பூங்காவில் வெளிவாரிப் பேணுகை முறைமையின் கீழ் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஹக்கல தாவரவியல் பூங்காவினால் போபுறு எல்ல மற்றும் சீதா எலிய பாதுகாக்கப்பட்ட வனங்களிலும் தங்கமலை வன சீவராசிகள் பாதுகாப்பகத்திலும் 3 களப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு 124 தாவர மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. அவற்றுள் 40 மாதிரிகள் தாவரக்கய மாதிரிகளாக அடையாளம் காணப்பட்டன.

ஹமில்டன் எல அபிவிருத்தித் திட்டத்துக்காக பிரதேசத்தின் தாவர சமூகத்துக்கு அதனால் ஏற்பட முடியுமான தாக்கங்களை மதிப்பிட்டு தொழில் நுட்ப ஆலோசனை வழங்கும் பொருட்டு கம்பஹா தாவரவியல் பூன்காவினால் கள ஆய்வுப் பயணமொன்று மேற்கொள்ளப்பட்டது. அத்தோடு வனமந்தாவ மூலிகைத் தோட்டம், அம்பேபுஸ்ஸ, கித்துல்கல மற்றும் ஹொரகொல்ல பாதுகாப்பு வனப் பகுதிகளில் மேலும் நான்கு களப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு முக்கிய பூக்கும் தாவரங்கள் 8 ன் மாதிரிகள் சேகரிக்கபப்பட்டன.

அத்தோடு கம்பஹா தாவரவியல் பூங்காவின் தாவரக்கயத்துக்கு புதிதாக தாவரக்கைய மாதிரிகள் சேர்க்கப்பட்டன.

### 5.1.2.2. தேசிய தாவரக்கயத்தின் முகாமை

இலங்கையின் உயிரின பல்வகைமையை விளங்கிக்கொள்ள வசதியளிக்கும் வகையிலும் அதனை முகாமைதத்துவம் செய்யும் வகையிலும் தேசிய தாவரக்கயமானது, தாவர வகைப்படுத்தல் மற்றும் முறைமையியல் பற்றிய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டது. மேலும் தாவரக்கய சேகரிப்புக்களை வளப்படுத்தல், அடையாளம் காணல், வேறுபடுத்துதல் மற்றும் புதிய மாதிரிகளை இணைத்தல் ஏலவே மாதிரிகளை முறையாகப் பேணல் ஆகிய பணிகளையும் மேற்கொண்டது.

**அ. தாவரக்கய மாதிரிகளை வளப்படுத்துதல்**

களப் பயணங்களின் போது சேகரிக்கப்பட்ட தாவரங்கள் அடையாளம் காணப்பட்டு வகைப்படுத்தப்பட்டு தாவரக்கயத்தில் எதிர்கால உசாத்துணைக்காக இணைக்கப்பட்டதோடு அவற்றைப் பேண நவீன தொழில்நுட்பமும் கையாளப்பட்டது. தேசிய மற்றும் கிளை தாவரக்கயங்களிலான வளப்படுத்தல் பணி பற்றிய விபரம் வருமாறு:

| சேகரிப்பின் வகை | மூலம் | பிரித்தறியப்பட்டு சேர்த்துக்கொள்ளபப்ட்டவை | தாவரக்கயம் |
|---|---|---|---|
| *வித்துமூடியுளிகள்* | ஆதமின் மலை வனம், புனித பாதத்திலிருந்து மீன்பிடிக் குடிசைகள் வரையான பாதை - 2011 | 4 | தேசிய தாவரக்கயம் |
| | குருநாகல் - வேஉடகந்த வனம் - 2010 | 1 | தேசிய தாவரக்கயம் |
| | அரச தாவரவியல் பூங்கா - 2012 | 29 | தேசிய தாவரக்கயம் |
| | ருஹுண தேசிய பூங்கா, கடகமுவ பாதுகாப்பு வனம் , | 17 | தேசிய தாவரக்கயம் |
| | ருஹுண தேசிய பூங்கா, வெடசிடிகந்த | 5 | தேசிய தாவரக்கயம் |
| | ருஹுண தேசிய பூங்கா, செல்லக் கதிர்காமத்துக்கு அருகில் | 8 | தேசிய தாவரக்கயம் |
| | ருஹுண தேசிய பூங்கா, சிதுள் பவ்வ பிரதேசம் | 8 | தேசிய தாவரக்கயம் |
| | தொடுளுகல வனம் | 1 | தேசிய தாவரக்கயம் |
| | பொபெள்ள, நாவுல | 2 | தேசிய தாவரக்கயம் |
| | உருளுவத்த, பிளிமதலாவ | 1 | தேசிய தாவரக்கயம் |
| | தொளுகந்த, குருநாகல் | 1 | தேசிய தாவரக்கயம் |
| | அரச தாவரவியல் பூங்கா, பேராதனை | 29 | தாவரக்கயம் – அரச தாவரவியல் பூங்கா, பேராதனை |
| | மொரகஹகந்த - எலஹர | 33 | தேசிய தாவரக்கயம் |
| | பீதுருதலாகல | 16 | தேசிய தாவரக்கயம் |
| | பல்வேறு நிறுவனங்களாலும் பல்கலைக்கழகங்களாலும் சமர்ப்பிக்கபப்ட்ட வவுச்சர் மாதிரிகள் | 116 | தேசிய தாவரக்கயம் |
| பாசி | ஹுன்னஸ்கிரிய | 10 | தேசிய தாவரக்கயம் |
| | வெடகெல்லே - கலாபொக்க | 25 | தேசிய தாவரக்கயம் |
| | நமுனுகுல | 15 | தேசிய தாவரக்கயம் |
| | பிதுருதலாகல | 20 | தேசிய தாவரக்கயம் |
| | தங்கப்புவ | 25 | தேசிய தாவரக்கயம் |
| | பீதுருதலாகல- மந்தாரம் நுவர | 10 | தேசிய தாவரக்கயம் |
| | செவன் வேர்ஜின் | 20 | தேசிய தாவரக்கயம் |

| சேகரிப்பின் வகை | மூலம் | பிரித்தறியப்பட்டு சேர்த்துக்கொள்ளபப்பட்டவை | தாவரக்கயம் |
|---|---|---|---|
| | மலைகள் | | |
| | தொலஸ்பாகே | 8 | தேசிய தாவரக்கயம் |
| | ஹந்தான | 12 | தேசிய தாவரக்கயம் |
| | லூல்கந்துர | 30 | தேசிய தாவரக்கயம் |
| மொத்தம் | | **444** | |

தாவரக்கய மாதிரிகளுக்கு இலக்கமிடல், தாவரக்கய தரவு உருவாக்கம் ஆகிய பணிகள் இவ்வருடமும் முன்னெடுக்கப்பட்டது. H. D. அல்விஸ் அவர்களது வரைபட சேகரிப்பிலிருந்து 375 வரைபடங்கள் டிஜிட்டல் மயப்படுத்தபப்ட்டன.

தாவரக்கய மாதிரிகளுக்கு, அவற்றை இலகுவில் கண்டுபிடிக்க இலகுவாகும் வகையிலான பார் குறியீட்டு முறையொன்றினை அமைக்கும் பணிகள் அரம்பிக்கபப்ட்டதொடு அதற்கான கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டன.

**ஆ. தற்போதுள்ள சேகரிப்பை முகாமைத்துவம் செய்தல்**

வழமை போல் இவ்வருடமும் தாவரக்கய மாதிரிகளின் பேணுகைக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

பொதுப் பேணுகை நடவடிக்கைகளை பின்வருமாறு பட்டியல் படுத்தலாம்:

| | செயற்பாடு | மாதிரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பழுதுபார்க்கப்பட்ட தாவரக் கய மாதிரிகள் | 9,725 |
| 2. | பூச்சித்தாக்கத்தாக்கத்துக்காக சிகிச்சையளிக்கப்பட்ட மாதிரிகள் (நஞ்சூட்டல்) | 80 |
| 3. | ஆழ் குளிரூட்டியில் இடப்பட்ட மாதிரிகள் | 19,665 |
| 4. | குவிக்கப்பட்ட மாதிரிகள் | 311 |
| 5. | மீள் குவிக்கப்பட்ட மாதிரிகள் | 3 |
| 6. | உறைகள் இணைக்கப்பட்ட மாதிரிகள் | 762 |
| 7. | இணைக்கப்பட்ட ஜீனஸ் உறைகள் | 539 |
| 8. | சுத்திகரிக்கப்பட்ட மாதிரிகள் | 22,071 |
| 9. | சுத்திகர்க்கப்பட்ட புத்தகங்கள் | 752 |
| 10. | அழுத்தப்பட்ட மாதிரிகள் | 1,869 |
| 11. | தட்டச்சு செய்யப்பட்ட லேபல்கள் | 3089 |

### 5.1.2.3. உயிரினப் பல்வகைமை முகாமைத்துவமும் அதனைப் புரிந்து கொள்ளலும்



இயற்கை மற்றும் செயற்கைச் சூழல்களில் தாவரங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள், நிலைபேற்றுப் பாவனை மற்றும் உயிரினப் பல்வகைமை அபிவிருத்தி ஆகியன பூங்காக்களின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பணியாகக் கணிக்கப்படுகின்றன. நாட்டில் உயிரினப் பல்வகைமை அபிவிருத்தியினை இலக்காகக் கொண்டு தேசிய

தாவரக்கயமானது பல ஆய்வு மற்றும் கல்வி நிகழ்ச்சிகளை நடாத்தியது.

**அ. இணைந்த ஆய்வுகளும் செயற்திட்டங்களும்**

கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து தேசிய தாவரக்க்கயம் பல்வேறு ஆய்வுகளை நடத்தியது.

**டிஜிட்டல் மயப்படுத்தல் செயன்முறை**

அதாவது: ``பாசி இனவகைத் தாவரங்களிலிருந்து உயிரியல் செயற்பாடு கொண்ட இயற்கைச் சேர்மானங்களை உயிரியல் மருத்துவ ஆய்வின் அடிப்படையில் பல்வேறு இயல்புகள் கொண்ட கூறுகளாகப் பிரித்தலும் தனிமைப்படுத்தலும்'', ``இலங்கை Gesneriaceae தாவரங்களின் தெரிவு செய்யப்பட்ட வகைகளின் பகுப்பியல் மற்றும் உயிரணுவியல்'',“"புற்தரைப் பன்மைத்துவமும் ஹந்தான மலைத் தொடரின் அழிவுறும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள தாவரங்களும்" ஆகிய தலைப்புக்களில் அவ் ஆய்வுகள் நடைபெற்றன.

இலங்கையின் மத்திய மாகாணத்தின் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களிலான பாசித் தாவரங்கள் குறித்த கண்டாய்தல்" குறித்த ஆரம்ப கணக்கெடுப்பு தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம் மற்றும் சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுக்கள் அமைச்சின் கீழான உயிரினப் பல்வகைமை செயலகத்தின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது.

தேனீ மகரந்தச் சேர்ப்பிகள் குறித்த கணக்கெடுப்புக்கான செயற்திட்டமொன்றும் தேசிய ஆராய்ச்சி சபையின் நிதி உதவியுடன் ருஹுணு பல்கலைக் கழகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. மேலும் இலங்கைத் தாவரங்களின் நிறமூர்த்தங்கள் பற்றிய ஆய்வொன்று தேசிய ஆராய்ச்சி சபையின் நிதி உதவியுடன் பேராதனை பல்கலைக் கழகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது.

பேராதனை, அரச தாவரவியல் பூங்காவில் உள்நாட்டு மரங்கள் 15, எமது நாட்டுக்கு மாத்திரமுரிய மரங்கள் 12 மற்றும் வெளிநாட்டு மரங்கள் 28 பற்றி அவற்றின் வாழ்க்கை வட்டம், பருவ மற்றும் ஆண்டிடையில் ஏற்படும் காலநிலை மாற்றங்களால் அவற்றுக்கு ஏற்படும் தாக்கங்கள் அவற்றின் வாழிடம் என்பன பற்றிய உயிரிகள் ஆய்வியல் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. மேலும் பூங்காவின் உயிரிச் சேகரிப்பு பற்றிய இலத்திரனியல் தரவுத் தளத்தை தயாரிப்பதற்குத் தேவையான புகைப்படங்களும் எடுக்கபப்ட்டன.



மிரிஜ்ஜவில, உலர் வலய தாவரவியல் பூங்காவின் மரச் சேகரிப்பு

கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து கடல் தாவரங்கள் குறித்த ஆய்வுச் செயற்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு பச்சை, சிவப்பு மற்றும் பளுப்பு நிற அல்காக்களின் வவுச்சர் மாதிரிகள் 115 சேகரிக்கப்பட்டன.

அவிசாவலை, இலுக்கோவிட ஈர வலய தாவரவியல் பூங்காவில் மூங்கில் தாவரங்களின் பாதுகாப்பகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான செயற்திட்டமொன்று குறித்து ஐக்கிய நாடுகள் சுற்றாடல் நிகழ்ச்சித் திட்ட அதிகாரிகளுடன் பல கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

**ஆ. தாவரவியல் நடவடிக்கைகள்**

பேராதனை, ஹக்கல, கம்பஹா தாவரவியல் பூங்காக்களிலும் கனேவத்த மூலிகைத் தாவரங்கள் பூங்காவிலும் காணப்படும் உள்நாட்டு, எமது நாட்டுக்கு மாத்திரம் உரிய மற்றும் வெளிநாட்டுத்

தாவரங்களின் வெளிவாரிப் பாதுகாப்புச் சேகரிப்புகள் உயர் தரத்தில் பேணப்பட்டதோடு, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மிரிஜ்ஜவில உலர் வலய மற்றும் அவிசாவலை இலுக்கோவிட ஈர வலய தாவரவியல் பூங்காக்களிலும் உரிய பிரதேசத்துக்குரிய தாவரங்களின் வெளிவாரிப் பேணுகைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**இ. கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள்**

பூங்காக்களில் இவ்வருடம் பின்வரும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன:

| நிகழ்ச்சித்திட்டத்தின் தலைப்பு | கலந்து கொண்டோர் | நிறுவனம் | நடாத்திய நிறுவனம் |
|---|---|---|---|
| தாவரங்களை அடையாளம் காண்பதில் தாவரக்கயத்தின் வகிபாகம், உயிரியல் பல்வகைமை பேணல், தாவரக்கய முகாமைத்துவம், தாவரக்கய நுட்பங்கள் பற்றிய விரிவுரையும் களப்பயணமும் | 30 மாணவர்கள் | புனித மரியாள் கல்லூரி, கேகாலை | தேசிய தாவரக்கயம் |
| | 10 மாணவர்கள் | லைசியம் சர்வதேசக் கல்லூரி, கம்பஹா | தேசிய தாவரக்கயம் |
| | 120 மாணவர்கள் | தெல்தெனிய தேசிய பாடசாலை | தேசிய தாவரக்கயம் |
| | 35 மாணவர்கள் | ரஜரட்ட பல்கலைக்கழகம் | தேசிய தாவரக்கயம் |
| | 29 மாணவர்கள் | கொழும்பு பல்கலைக்கழக புவியியல் திணைக்களம் | தேசிய தாவரக்கயம் |
| | 45 மாணவர்கள் | யாழ் பல்கலைக்கழகம் | தேசிய தாவரக்கயம் |
| | 08 மாணவர்கள் | களனி பல்கலைக்கழகம் | தேசிய தாவரக்கயம் |
| | 200 மாணவர்கள் | திறந்த பல்கலைக்கழகம், நாவல மற்றும் பொல்கொல்ல | தேசிய தாவரக்கயம் |
| | 70 மாணவர்கள் | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் | தேசிய தாவரக்கயம் |
| | 15 மாணவர்கள் | பேராதனை பல்கலைக்கழகம் | தேசிய தாவரக்கயம் |
| | 27 மாணவர் கள் | இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம், பேராதனை பல்கலைக்கழகம் | தேசிய தாவரக்கயம் |
| | வனஜீவராசிகள் பயிற்சி அதிகாரிகள் 25 பேர் | தேசிய வனஜீவராசிகள் பயிற்சி நிலையம் - கிரிதலே | தேசிய தாவரக்கயம் |

| நிகழ்ச்சித்திட்டத்தின் தலைப்பு | கலந்து கொண்டோர் | நிறுவனம் | நடாத்திய நிறுவனம் |
|---|---|---|---|
| மூலிகைத் தாவரங்களை அடையாளம் காணல், தாவரக்கய முகாமைத்துவம், தாவரக்கய நுட்பங்கள் பற்றிய விரிவுரையும் களப்பயணமும் | ஆயுர்வேத வைத்தியர்கள் 80 பேர் | ஆயுர்வேதத் திணைக்களம், மத்திய மாகாணம் | தேசிய தாவரக்கயம் |
| பூங்கா சுற்றுப்பயணமும் பூங்கா அறிமுகமும் | மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கீழான சுற்றாடல் கண்காணிப்பு வழிகாட்டி மாணவர்கள் 130 பேர் | தெல்தெனிய வித்தியாலயம் | அரச தாவரவியல் பூங்கா |
| | 215 மாணவர்கள் | புனித ஜோசப் பெண்கள் கல்லூரி, கேகாலை | அரச தாவரவியல் பூங்கா |
| | 40 மாணவர்கள் | கண்னோருவ ரோயல் கல்லூரி, சுவர்ணமாலி மகளிர் வித்தியாலயம் | அரச தாவரவியல் பூங்கா |
| | 30 மாணவர்கள் | முருத்தலாவ பலாவ நவோத்யா வித்தியாலயம் | அரச தாவரவியல் பூங்கா |
| | 30 மாணவர்கள் | நில்தண்டஹின்ன வித்தியாலயம், கொத்மலை | அரச தாவரவியல் பூங்கா |
| | 60 மாணவர்கள் | புனித ஆன் மகளிர் கல்லூரி, கொழும்பு | அரச தாவரவியல் பூங்கா |
| | 29 விஞ்ஞான ஆசிரியர் பயிலுனர்கள் | சியனே ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி | அரச தாவரவியல் பூங்கா |
| பூங்கா அறிமுகம் குறித்த முன்வைப்பும் களப் பயணமும் | பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்கள் 400 பேர் | தலைமைத்துவப் பயிற்சி | அரச தாவரவியல் பூங்கா |
| பூங்காவினுள் வசதியளிக்கப்பட்ட களப்பயணம் | ஆயுர்வேத வைத்தியர்கள் 50 பேர் | கிழக்கு,மேற்கு மற்றும் மத்திய மாகாணங்கள் | அரச தாவரவியல் பூங்கா |
| | சாரணர் 38 பேர் | கிளிநொச்சி மாவட்டம் | அரச தாவரவியல் பூங்கா |
| மரப் பேணுகை நிகழ்ச்சித் | 10 பயிலுனர்கள் | வனசீவராசிகள் | அரச தாவரவியல் பூங்கா |

| நிகழ்ச்சித்திட்டத்தின் தலைப்பு | கலந்து கொண்டோர் | நிறுவனம் | நடாத்திய நிறுவனம் |
|---|---|---|---|
| திட்டம் | | திணைக்களம், | |
| உயிரியல் பல்வகைமை பேணலில் தாவரக்கயத்தின் வகிபாகம் பற்றிய விரிவுரையும் களப் பயணமும் | 52 மாணவர்கள் | ரணபிம ரோயல் கல்லூரி, சுவர்ணமாலி மகளிர் வித்தியாலயம் | தேசிய தாவரக்கயம் |
| உயிரியல் பல்வகைமை பேணல் மற்றும் தாவர வகைப்படுத்தலில் தாவரக்கயத்தின் வகிபாகம் பற்றிய விரிவுரையும் களப் பயணமும் | 27 மாணவர்கள் | இணைந்த சுகாதார விஞ்ஞான கற்கைகள் பீடம், பேராதனை பல்கலைக் கழகம் | தேசிய தாவரக்கயம் |
| உள்நாட்டு விஞ்ஞானிகளுக்கு தாவரக்கயத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பளிக்கும் 05 நாள் நிகழ்ச்சி | 2 மாணவர்கள் | விவசாய பீடம், பேராதனை பல்கலைக் கழகம் | தேசிய தாவரக்கயம் |
| ஆக்கிரமிப்புத் தாவரங்களும் எமது நாட்டுக்கு மாத்திரம் உரிய தாவரங்களும் | 36 அதிபர்கள் | நுவரெலியா கல்வி வலயம் | ஹக்கல தாவரவியல் பூங்கா |
| Bio diversity and field exploration | 30 மாணவர்கள் | நுவரெலியா கல்வி வலயப் பாடசாலைகள் | ஹக்கல தாவரவியல் பூங்கா |
| தாவரப் பேணுகையும் தாவரவியல் பூங்காவின் வகிபாகமும் | 10 மாணவர்கள் | களனி பல்கலைக் கழகம் | ஹக்கல தாவரவியல் பூங்கா |
| இலங்கையின் தாவரங்கள் | 40 மாணவர்கள் | விசாகா வித்தியாலயம், பண்டாரவளை | ஹக்கல தாவரவியல் பூங்கா |
| | 79 university selected மாணவர்கள் | தலைமைத்துவப் பயிற்சி | ஹக்கல தாவரவியல் பூங்கா |
| உயிரினப் பல்வகைமை பேணல் | 50 மாணவர்கள் | கம்பஹா பிரதேச பாடசாலை மாணவர்கள் | கம்பஹா தாவரவியல் பூங்கா |
| | 45 மாணவர்கள், 05 ஆசிரியர்கள் | மினுவான்கொட கல்வி வலயப் பாடசாலைகள் | கம்பஹா தாவரவியல் பூங்கா |
| | சூழலியல் சங்க அங்கத்தவர்கள் 35 பேர் | கோதமி மகளிர் வித்தியாலயம், | கம்பஹா தாவரவியல் பூங்கா |

| நிகழ்ச்சித்திட்டத்தின் தலைப்பு | கலந்து கொண்டோர் | நிறுவனம் | நடாத்திய நிறுவனம் |
|---|---|---|---|
| | | கொழும்பு | |
| | 38 பயிலுனர்கள் | வனசீவராசிகள் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம் | அரச தாவரவியல் பூங்கா |
| | 15 பட்டதாரி மாணவர்கள் | கொழும்பு பல்கலைக் கழகம் | ஈர வலய தாவரவியல் பூங்கா, அவிசாவலை |
| தாவரக்கய முகாமை மற்றும் தாவரக்கய நுட்பங்கள் பற்றிய விரிவுரை | 25 உ/த மாணவர்கள் | உடுவரெல்ல வித்தியாலயம், கம்பஹா | தேசிய தாவரக்கயம் |
| | 40 மாணவர்கள் | மொரட்டுவைப் பல்கலைக் கழகம் | தேசிய தாவரக்கயம் |
| தாவரக்கயத்தின் வகிபாகம், தாவரக்கய முகாமை மற்றும் தாவரக்கய நுட்பங்கள், உயிரினப் பல்வகைமை பற்றிய விரிவுரையும் களப்பயணமும் | 200 மாணவர்கள் | பல்கலைக் கழக நாவல மற்றும் பொல்கொல்ல கிளைகள் | தேசிய தாவரக்கயம் |
| | 70 மாணவர்கள் | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகம் | தேசிய தாவரக்கயம் |
| | 125 மாணவர்கள் | உண்ணாட்டு மருத்துவக் கல்லூரி, கொழும்பு பல்கலைக் கழகம் | தேசிய தாவரக்கயம் |
| | 15 மாணவர்கள் | பேராதனை பல்கலைக் கழகம் | தேசிய தாவரக்கயம் |



**கொழும்புப் பல்கலைக் கழக மாணவர்களுக்கான உயிரினப் பல்வகைமை குறித்த கல்வி அமர்வொன்று**



**பாடசாலை மாணவர்களுக்கான உயிரினப் பல்வகைமை குறித்த கல்வி அமர்வொன்று**

'தாவர மூலக்கூற்று முறைமைகள்' பற்றிய 05 நாள் வதிவிடச் செயலமர்வொன்று, பேராதனை அரச தாவரவியல் பூங்காவின் கல்வி மற்றும் பயிற்சி நிலையத்தில் 2013 மார்ச் 04ம் திகதி முதல் 08ம் திகதி வரை நடைபெற்றது. அதில் பல்கலைக் கழகங்கள், அரச மற்றும் தனியார் விஞ்ஞான அமைப்புக்கள் மற்றும் ஆர்வமுடையோர்கள் பலர் பங்கேற்றனர். இவ்வாய்வுத்துறையை உள்நாட்டு ஆய்வாளர்கள் மத்தியில் ஊக்குவிப்பதும் இத்துறையில் அவர்களைப் பயிற்றுவிப்பதும் இதன் நோக்கமாகும். ஆய்வுகூட/ செயன்முறை அமர்வுகளும் விரிவுரைகளும் களப்பயணங்களும் இதில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இச்செயலமர்வானது தேசிய தாவரக்கயத்தால் இலங்கை சுற்றாடல் மற்றும் புத்தாக்க வலு அமைச்சின் உயிரியல் பல்வகைமைச் செயலகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது. இதனை நடாத்தவென கிவ் அரச தாவரவியல் பூங்காவின் ஜொட்ரெல் ஆய்வுகூடப் பணிப்பாளர் பேராசிரியர். எம். ட்ப்ளிவ். சேஸ், ஒஸ்ட்ரிய வியென்னா பலகலைக் கழகத்தைச் சேர்ந்த கலாநிதி. எம்.எச்.ஜே.பார்ஃபுஸ் மற்றும் பேராசிரியர். சமுவேல் ஆகியோர் வரவழைக்கப்பட்டனர்.






கற்கை அமர்வுகள்

6

அபிவிருத்தி

**எமது எதிர்பார்ப்பு**

- தாவர வளங்களின் பேணுகைக்கும் நிலைபேற்றுப் பாவனைக்கும் தாவரவியல் பூங்காக்கள் ஆற்றும் பணியின் முக்கியத்துவத்தினை உணர்ந்து போற்றும் பண்பினை மக்களிடை மேம்படுத்துவதும் எமது பூங்காக்களில் பேணப்படும் முக்கிய சேகரிப்புக்களை மக்கள் பார்வையிடுவதோடு அவர்களுக்காக நாம் ஏற்பாடு செய்து வைத்துள்ள மேம்படுத்தப்பட்ட வசதிகளையும் அனுபவிக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

**முக்கிய குறிக்கோள்கள்**

- தாவரவியல் பூங்காக்களின் தரத்தை மேம்படுத்தல்
- புதிய தாவரவியல் பூங்காக்களை அமைத்தல்
- அலங்கார பூச்செடியியலை அபிவிருத்தி செய்தல்

**6.1 இக்குறிக்கோள்களை அடையும் பொருட்டு அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்**

- **6.1.1 தாவரவியல் பூங்காக்களின் தரத்தை மேம்படுத்தல்**

தாவரவியல் பூங்காக்களுக்கு வருகை தருவோருக்கான அடிப்படை வசதிகள் தேவைக்கேற்ப மேம்படுத்தப்பட்டதோடு, தாவரவியல் பூங்காகாக்கள் அனைத்தும் உயர் தரத்தில் பேணப்பட்டன. பூங்காக்களின் தாவரச்சேகரிப்புக்கள் சிறந்த பேணுகை மூலமும் புதிய தாவரங்களை இணைப்பதன் மூலமும் வளப்படுத்தப்பட்டன.

**அ. தாவரச்சேகரிப்புக்களை மேம்படுத்துதல்**

**தாவர உற்பத்தி**

உள்ளக மற்றும் வெளிக்களத் தாவரங்கள் பூங்காக்களில் உற்பத்தி செய்யப்பட்டு பூங்காக்களின் உயிரிச் சேகரிப்பும் நில அலங்காரமும் மேம்படுத்தப்பட்டதோடு விற்பனை நிலையங்களில் விற்பனைக்கும் வைக்கபப்ட்டன. பின்வரும் அட்டவணை இதனை விளக்குகிறது:

| பூங்கா | வகை | தொகை |
|---|---|---|
| அரச தாவரவியல் பூங்கா | வெளிக்களத் தாவரங்கள் | 154,610 |
| ஹக்கல தாவரவியல் பூங்கா | உள்ளக மற்றும் வெளிக்களத் தாவரங்கள் | 82,454 |
| கம்பஹா தாவரவியல் பூங்கா | உள்ளக மற்றும் வெளிக்களத் தாவரங்கள் | 48,700 |
| மூலிகைத் தாவரப் பூங்கா | மூலிகைத் தாவரங்கள் | 19,664 |
| மிரிஜ்ஜவில உலர் வலய தாவரவியல் பூங்கா | மூலிகைகள், அலங்காரத் தாவரங்கள் படரிகள் மற்றும் வனத் தாவர வகைகள் | 44,003 |
| பேராதனை மற்றும் கம்பஹா தாவரவியல் பூங்காக்களின் பூச்செடியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி அலகுகள் | ஒகிட்கள், அந்தூரியம்கள், இலைத் தாவரங்கள், ஜேர்பரா | 89.392 |

| மொத்தம் | 438,823 |
|---|---|

**பூங்காக்களின் மரச் சேகரிப்புக்களுடன் இணைக்கப்பட்ட தாவரங்கள்**

பின்வரும் வகையில் பூங்காக்களின் மரச்சேகரிப்புகளுடன் அரிய, அழிவுறும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தாவரங்கள் இணைக்கப்பட்டு உயிரினப் பல்வகைமை வளப்படுத்தப்பட்டது.


| பூங்கா | தாவரங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | மரச்சேகரிப்பில் | மரச்சேகரிப்பு நாற்று மேடையில் |
| அரச தாவரவியல் பூங்கா | 40 | 903 |
| ஹக்கல தாவரவியல் பூங்கா | 483 | 1,208 |
| கம்பஹா தாவரவியல் பூங்கா | 38 | 706 |
| மிரிஜ்ஜவில உலர் வலய தாவரவியல் பூங்கா | 6,559 | - |
| **மொத்தம்** | **7,120** | **2,817** |

இவ்வருடம் பூங்காக்களின் மரச்சேகரிப்பில் இணைக்கப்பட்ட அழிவுறும் ஆபத்துக்குட்பட்டுள்ள மற்றும் அவ் ஆபத்துக்கு உட்படக்கூடிய தாவரங்களின் பட்டியல்:

| பூங்கா | தாவர வகை | தாவர இனம் | எண்ணிக்கை | மரச்சேகரிப்பின் பிரிவு | பேணல் நிலை |
|---|---|---|---|---|---|
| அரச தாவரவியல் பூங்கா | எமது நாட்டுக்கு மாத்திரம் உரிய | *Aporosa cardiosperma* | 1 | D | VU |
| | | *Alphonsea hortensis* | 26 | L, மரச்சேகரிப்பு நாற்றுமேடை | EW |
| | | *Eugenia rufo-fulva* | 21 | மரச்சேகரிப்பு நாற்றுமேடை | VU |
| | | *Litsea longifolia* | 80 | மரச்சேகரிப்பு நாற்றுமேடை | VU |
| | | Trichadenia zeylanica | 1 | F | VU |
| | | *Hopea modesta* | 1 | D | CR |
| | | *Shorea trapezifolia* | 1 | D | CR |
| | | *Doona ovalifolia* | 1 | C | CR |
| | | *Elaeocarpus subvillosus* | 1 | D | VU |
| | | *Stemonurus apicalis* | 1 | F | CR |
| | | *Shorea stipularis* | 1 | D | CR |
| | உள்நாட்டு | *Grewia orientalis* | 1 | Ca | VU |
| | வெளிநாட்டு | *Albizia lebbeck-B* | 1 | B | |
| | | *Bertholletia excelsa* | 1 | Aa | VU |
| | | *Diospyros discolor* | 60 | மரச்சேகரிப்பு நாற்றுமேடை | VU |

| பூங்கா | தாவர வகை | தாவர இனம் | எண்ணிக்கை | மரச்சேகரிப்பின் பிரிவு | பேணல் நிலை |
|---|---|---|---|---|---|
| | | *Parmentiera cereifera* | 275 | மரச்சேகரிப்பு நாற்றுமேடை | EN |
| ஹக்கல தாவரவியல் பூங்கா | எமது நாட்டுக்கு மாத்திரம் உரிய | *Cyathea crinita* | 20 | - | EN |
| | | *Rhododendron zelanicum* | 25 | நாற்றுமேடை | VU |
| | வெளிநாட்டு | *Pseudotsuga wilsoniana* | 2 | நாற்றுமேடை | VU |
| | | *Calocedrus macrolepis kurz Var formosana* | - | தாவர உருவாக்கம் நடைபெறுகிறது | VU |
| | | Chamaecyparis *formosensis Matsum* | 24 | நாற்றுமேடை | EN |
| | | *Podocarpus nakaii Hay* | 2 | நாற்றுமேடை | EN |
| கம்பஹா தாவரவியல் பூங்கா | எமது நாட்டுக்கு மாத்திரம் உரிய | *Doona congestifolia* | 1 | F | CR |
| | | *Vateria copallifera* | 02 | D,F | EN |
| | உள்நாட்டு | *Pterocarpus marsupium* | 01 | A | VU |

**ஆ. நில மேம்படுத்துகை நடவடிக்கைகள்**



**அரச தாவரவியல் பூங்காவின் மேம்படுத்தப்பட்ட பன்னத்தோட்டம்**

பூங்காக்களின் தரத்தையும் நில அலங்காரத்தையும் மேம்படுத்தும் பொருட்டு அனைத்துப் பூங்காக்களிலும் இவ்வருடம் நில மேம்படுத்துகைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அரச தாவரவியல் பூங்காவின் பன்னத்தோட்டம் எமது நாட்டுக்கு மாத்திரம் உரிய மற்றும் அரிய தாவர வகைகள் புதிதாக இணைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டதோடு, புதிதாக நீர் தெளித்தல் கருவிகள் பொருத்தபப்ட்டன. எண்கோண இல்லத்திற்கும் பூப்பந்தல்களுக்கும் புதிதாக தாவரங்களும் லேபல்களும் இணைக்கபப்ட்டன.

கனேவத்த மூலிகைப் பூங்காவில் தாவர நடுகை நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டு அரத்தை (*Alpinia calcarata*), கொதல ஹிம்புட்டு (*Salacia reticulata*) மற்றும் மல்லிகை (Jasminum sp.) ஆகிய தாவரங்கள் நடப்பட்டன. படரிகள் சேகரிப்பும் புதிய தாவர வகைகள் இணைக்கபப்ட்டு மேம்படுத்தப்பட்டன.

ஹக்கல தாவரவியல் பூங்காவின் ரோசா மலர்ச்செடிச் சேகரிப்பு விரிவுபடுத்தப்பட்டது. ஏப்ரல் பருவ காலத்தை வரவேற்கும் பொருட்டு பூங்காவை அழகுபடுத்துமுகமாக நில மேம்படுத்துகைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.



**கனேவத்த மூலிகைப் பூங்காவில் அரத்தை பயிர்ச்செய்கை**

பூங்காக்களின் நிலா அலங்காரத்தை மேம்படுத்தும் பொருட்டு டேலியா, ஃப்ளொக்ஸ், சல்வியா, கசானியா, மெர்ரிகோல்ட், அந்தூரியம், கல்சியோலேனியா, கலெண்டுலா, அஸ்டர், கொஸ்மொஸ், பெடுனியா, பென்ஸி, சீனியா, செலோசியா,கோலியஸ் ஆகியன கொள்வனவு செய்யப்பட்டு நடப்பட்டன.



## ஹக்கல தாவரவியல் பூங்காவின் ரோசாத் தோட்ட விரிவாக்கம்

**இ. தாவரச் சிகிச்சைகள்**

பூங்காக்களின் உயிரிச் சேகரிப்பை ஆரோக்கியமாகப் பேணும் நோக்கில், பிரதான மூன்று பூங்காக்களில் சுமார் 93 மரங்களுக்கு தாவரச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றின் விபரம் வருமாறு:

| தாவரச் சகிச்சை வகை | பூங்கா | மரங்கள் |
|---|---|---|
| வேர்ச் சிகிச்சை | அரச தாவரவியல் பூங்கா, பேராதனை | *Diospyros sp.(S-648)*<br>*Lagerstroemia sp.(Q-343)*<br>*Lysidice rhodostegia(F/323) Unidentified Saraca asoca (N/136) - Main Border Tree*<br>*Elaeocarpus sp.(Ea/29)*<br>*Elaeocarpus sp.(E/82)*<br>*Cupressus funebris (G/52)*<br>*Artocarpus heterophyllus (G)* |
| தண்டுச் சிகிச்சை | அரச தாவரவியல் பூங்கா, பேராதனை | *Dipterocarpus alatus (D/132)*<br>*Nephelium lappaceum (H)*<br>*Citharexylum Cinereum (E/81)*<br>*Murraya paniculata (N) -Memorial Tree*<br>*Holarrhena mitis (S/609)*<br>*Phyllanthus emblica (L/82)*<br>*Crescentia cujate (Main border) Parmentiera cereifera (Main border) Zyziphus trinervia (BB/140)*<br>*Ficus tsjakela (G/103)*<br>*Tabebuia rosea (D) Memorial Tree Tabebuia guayacan (D) Memorial Tree*<br>*Cassia nodosa (I)* |
| | கம்பஹா தாவரவியல் பூங்கா | *Manilkara zapota(D)*<br>*Hevea brasiliensis(B)*<br>*Averrhoa carambola(B)*<br>*Diospyros malabarica (B)*<br>*Mangifera indica(C)*<br>*Hevea brasiliensis(B)*<br>*Averrhoa carambola(E)*<br>*Cassia nodosa(D)*<br>*Manilkara zapota(F)*<br>*Lodoicea maldivica(D)*<br>*Anacardium occidentale(D)*<br>*Adenanthera pavonina (F)* |
| இத்துப்போன கிளைகளை அகற்றுதல் | அரச தாவரவியல் பூங்கா, பேராதனை | *Zizyphus sp.(M/1)*<br>*Chrysophyllum roxburghii (F/207)*<br>*Chrysophyllum monopyrenum (M/63)*<br>*Lecythis pohlii (Q/354)*<br>*Chukrasia tabularis (D/25)*<br>*Pleurostylia opposite (Main Border)*<br>*Pometia eximia(E/197)*<br>*Filicium decipiens (E/160)* |
| | ஹக்கல தாவரவியல் பூங்கா | *04 Cuptessus macrocarpa*<br>*Cinnamomum camphora*<br>*Quercus robur* |

| தாவரச் சகிச்சை வகை | பூங்கா | மரங்கள் |
|---|---|---|
| | கம்பஹா தாவரவியல் பூங்கா | *Dialium ovidium(D)*<br>*Pterocarpus marsupium(C)*<br>*Delonix regia (D)*<br>*Lafoencia vandeliana (C)*<br>*Cinnamomum verum (C)*<br>*Ficus sp.(C)*<br>*Enterolobium cyclocarpum(A)*<br>*Garcinia sp. (A)*<br>*Hevea brasiliensis(B)* |
| இறந்த, விழுந்த மரங்களை அகற்றுதல் | அரச தாவரவியல் பூங்கா, பேராதனை | *Eugenia caryophyllata (E/45)*<br>*Diopyros embryopteris (N/281)*<br>*Juniperus bermudiana (R/183)*<br>*Calyptrocalyx sp.(I/174)*<br>*Artocarpus heterophyllus (D)*<br>*Bactris pallidispina (T/598)*<br>*Antidesma bunius (D/392)*<br>*Diospyros discolor (L/84)*<br>*Chrysobalanus icaco (Bb/11)*<br>*Magnolia sphenocarpa (Aa/148)*<br>*Copla millenii (D-151)*<br>*Peltoporum pterocarpum (B)*<br>*Artocarpus heterophyllus (Ea/9)*<br>*Terminalia arjuna (Aa/139)-Dead*<br>*Ficus trimenii (A/8)-Dead* |
| | கம்பஹா தாவரவியல் பூங்கா | *Alstonia macrophylla(C)*<br>*Alstonia macrophylla(D)*<br>*Mimusops elengi(E)*<br>*Pterocarpus indicus(E)*<br>*Pterocarpus marsupium(C)*<br>*Anacardium occidentale(E)*<br>*Horsfieldia irya(C)*<br>*Ficus fergusoni(C)*<br>*Jacaranda mimisaefolia (A)*<br>*Artocarpus nobilis (A)*<br>*Artocarpus heterophyllus* |
| ஆதாரங்கள் கம்பிகள் மூலம் உறுதிப்படுத்துதல் | அரச தாவரவியல் பூங்கா, பேராதனை | *Ficus benjamina (G/96)*<br>*8 cycad Trees*<br>*Pimenta dioica (N/95)*<br>*Hibiscus sp. (Main Border)*<br>*Cycas rumphii (Q)*<br>*Aglaia roxburghiana (O/92)* |

இதற்கு மேலதிகமாக பல்வேறு விகாரைகளினதும் தலைமைப் பிக்குகளின் வேண்டுகோள்களுக்கிணங்க அரச தாவரவியல் பூங்காவினால் 18 மத மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மரங்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதோடு மேலும் 03 மரங்களின் பேணுகைக்கான தொழில்நுட்ப ஆலோசனை வழங்கப்பட்டது. அவ்வாறே கம்பஹா தாவரவியல் பூங்காவினால் அத்தகைய 31 மரங்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் ஹக்கல தாவரவியல் பூங்காவினால் பாதுகாப்பற்ற சைப்ரஸ் மரங்கள் 11 பற்றி பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

**ஈ. தாவரங்களுக்கு லேபலிடல்**

பூங்காக்களின் உயிரிச் சேகரிப்பை மேம்படுத்தவும் தாவரங்கள் பற்றிய தகவல் பரப்புகைக்குமாக தாவரங்களுக்கு பின்வரும் வகையில் லேபல்கள் இடப்பட்டன.

| லேபல் வகை | பூங்கா | எண்ணிக்கை | பூங்காவின் பிரிவு |
|---|---|---|---|
| 8"x5" அளவு பொருத்துதல் | அரச தாவரவியல் பூங்கா, பேராதனை | 623 | Q, S, T,F, O, பிரிவுகள் மூலிகைப் பூங்கா, புல் |

| லேபல் வகை | பூங்கா | எண்ணிக்கை | பூங்காவின் பிரிவு |
|---|---|---|---|
| | | | சேகரிப்பு, பிரதான எல்லை, மாணவர் பூங்கா, வாசனைத் திரவியப் பூங்கா, பன்னத் தோட்டம், பூப்பந்தல்கள், வளைவுகள், எண்கோண இல்லம் |
| | ஹக்கல தாவரவியல் பூங்கா | 42 | மரச்சேகரிப்பு |
| 8"x5" அளவு வரைதல் | அரச தாவரவியல் பூங்கா, பேராதனை | 785 | F, N , Q , S, T பிரிவுகள், மூலிகைப் பூங்கா, புல் சேகரிப்பு, மாணவர் பூங்கா, வாசனைத் திரவியப் பூங்கா, பன்னத் தோட்டம், பூப்பந்தல்கள், வளைவுகள், எண்கோண இல்லம் |
| | ஹக்கல தாவரவியல் பூங்கா | 447 | மரச்சேகரிப்பு |
| | கம்பஹா தாவரவியல் பூங்கா | 750 | மரச்சேகரிப்பு |
| 6"x5" அளவு வரைதல் | அரச தாவரவியல் பூங்கா, பேராதனை | 107 | மூலிகைப் பூங்கா, மாணவர் பூங்கா, வாசனைத் திரவியப் பூங்கா, |
| 48'x18" அளவு பொருத்துதல் | ஹக்கல தாவரவியல் பூங்கா | 1 | மரச்சேகரிப்பு |
| | கம்பஹா தாவரவியல் பூங்கா | 18 | மரச்சேகரிப்பு |

இதற்கு மேலதிகமாக பேராதனை பூங்காவில் 46 விபரப் பலகைகளின் ஸ்டிக்கர்கள் மாற்றியமைக்கப்பட்டு, புதிதாக 20 விபரப் பலகைகள், ஜேர்மன் மற்றும் ஃபிரென்ஞ் மொழி அறிவுறுத்தல்களுடன் பொருத்தப்பட்டன.



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொலி டனல்

**உ. பூங்காக்களின் கீழ்க்கட்டுமான வசதிகளை மேம்படுத்துதல்.**

கட்டிடங்கள், கட்டமைப்புக்கள் என்பன மேம்படுத்தப்பட்டதோடு, புதிய இயந்திரங்கள், உபகரணங்கள் ஆகியனவும் கொள்வனவு செய்யபப்ட்டன. அத்தோடு இருக்கும்



இயந்திரங்களும் உபகரணங்களும் பழுதுபார்க்கப்பட்டன. அனைத்துப் பூங்காக்களதும் வாய்க்கால்களும் வாடிகான்களும் திருத்தியமைக்கப்பட்டன.

பேராதனை பூங்காவின் புதிய நினைவுச் சின்ன விற்பனை நிலையம்



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட, கள ஊழியர்களுக்கான கட்டடம்

**<u>அரச தாவரவியல் பூங்கா, பேராதனை</u>**

பூங்காவின் பிரதான பாதை காபட் இடப்பட்டு மேம்படுத்தப்பட்டதோடு, வாசனைத்திரவியப் பூங்கா, பூத்தோட்டம், ஆற்று வளைவு, கேபேஜ் பனை வீதி, பெரு வட்டம், ரோயல் பனை வீதி, பிரிவு B, பிரிவு C ஆகிய பகுதிகளின் நடை பாதைகளும் மேம்படுத்தப்பட்டன. மேலும் சில பகுதிகளுக்கு “இண்டர்லொக்” கற்கள் இப்பப்பட்டன.

மாணவர் பூங்கா, புதிய நலன்புரி

சிற்றுண்டிச்சாலைக் கருகாமை, பெரு வட்ட அருகாமை, உள்ளக நாற்று மேடையின் வசந்த இல்லம் ஆகிய பகுதிகளின் வடிகால்கள் செப்பனிடபப்ட்டன.

புதிதாக நினைவுச்சின்ன விற்பனை கூடமொன்றும் அங்கவீனர்களுக்கான வசதிகளுடனான புதிய நுழைவுச்சீட்டுக் கரும பீடமொன்றும் லக்சல நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்டது.

எண்கோண இல்லப் புனரமைப்புப் பணிகளும் பகுதியளவில் நிறைவு செய்யப்பட்டது. வெளிக்களத் தாவரங்களின் சிறந்த பேணுகைக்கென வெளிக்கள நாற்று மேடை - 1 ல் அரை வட்ட பொலி டனல் ஒன்று அமைக்கபப்ட்டது.


ஏற்கனவே உள்ள கழிவறைகள் மேம்படுத்தப்பட்டதோடு, தொழிலாளர் மடம் சகல வசதிகளுடனும் புனரமைக்கப்பட்டது.

ஏற்கனவே இருந்த சிற்றுண்டிச்சாலை கள அலுவலர்களது அலுவலமாகவும் வாகனம் நிறுத்திமிடமாகவும் மாற்றியமைக்கப்பட்டு, முன்னைய தொழிலாளர் மடம் சிற்றுண்டிச்சாலையாக வடிவமைக்கப்பட்டது.

மேலும், பார்வையாளர்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் நோக்கில்



புனரமைக்கப்பட்ட கழிவறைக் கட்டடம்



வாசனைத்திரவியப் பூங்காவின் நடைபாதைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன

பூங்காவில் ஆங்காங்கே நீர் அருந்தும் குழாய்களைப் பொருத்தவும் ஆசனங்களை அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பொதுநலவாய பேராளர்களின் துணைவியருக்கான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பூங்காவைத் தரிசித்த தூதுக்குழுவினருக்கு வசதிகள் செய்யும் வகையில் 06 புதிய பற்றறிக் கார்கள் கொள்வனவு செய்யபப்ட்டதோடு, கஃபடேரியா உணவகமும் மேம்படுத்தப்பட்டது. 2014 ம் ஆண்டு முதல் இக்கார்கள் பூங்காவுக்கு வரும் பார்வையாளர்களுக்கு பூங்காவைப் பார்வையிடவென ஒதுக்கித் தரப்படும்.




கம்பஹா தாவரவியல் பூங்காவின் அபிவிருத்தி செய்யப்பட்ட வாகனத் தரிப்பிடம்

கணனிகள் மேம்படுத்தப்பட்டு கல்வி மற்றும் பயிற்சி நிலையத்தின் வசதிகள் மேம்படுத்தபப்ட்டன. இவ்வகையில், நில வடிவமைப்புக்குப் பயன்படுத்தப்படும் ஓடோ காட் கணணி நிகழ்ச்சிகளைக் கையாளும் வகையில் 10 புதிய கணனிகள் கொள்வனவு செய்யபப்ட்டன.

கள்ளித் தாவர இல்லம் புனரமைக்கப்பட்டு, அந்தூரியம் மற்றும் ஒகிட் நாற்றுமேடைகளில் பூச்சாடி தயாரிப்பகங்கள் நிர்மாணிக்கப்பட்டன. மேலும் இரசாயன கூடத்திலிருந்து கழிவு நீரை அகற்றுவதற்கான வாய்க்கால்கள் அமைக்கப்பைட்டன. இலைத் தாவரப் பகுதியில் இரண்டு நிழல் இல்லங்களுக்கு புதிதாக பொலித்தீன் கூரை இடப்பட்டது. இலைத் தாவர நாற்று மேடைக்கு புதிய நுழைவாயில் ஒன்றும் பொருத்தப்பட்டது.



புனரமைக்கப்பட்ட கள்ளித் தாவர இல்லம்



**<u>ஹக்கல தாவரவியல் பூங்கா</u>**

புதிய காரியாலய கட்டிடத் தொகுதி ஒன்றினை அமைப்பதற்கான விலை மனு அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துக்கு

வழங்கப்பட்டுள்ளது. நிர்மாணப் பணிகள் 2014 ம் ஆண்டு ஆரம்பமாகும்.

மரச் சேகரிப்பின் உள்ளக வீதிகளும் நடை பாதைகளும் கொங்கிரீட் மற்றும் “இன்டர்லொக்” கற்கள் மூலம் செப்பனிடப்பட்டன.

ஹக்கல பூங்காவின் மேம்படுத்தப்பட்ட உள்ளக வீதிகள்

தூர்ந்து போன வடிகான்கள் புனரமைக்கப்பட்டு 1500 மீட்டர் நீளமான காபட் வீதியின் ஓரங்கள் செப்பனிடப்பட்டன.

பொலிடனல்கள், பூச்சாடி தயாரிப்பகங்கள் போன்ற தற்போதுள்ள கட்டமைப்புக்கள் புனரமைக்கப்பட்டு தாவரங்கள் சிறந்த
முறையில் பேணப்பட்டன. பூங்காவின் நீர்த் தாங்கியும் கழிவறைகளும் புனரமைக்கப்பட்டன.

காணி எல்லையிடல் நடவடிக்கைகள் நில அளவையாளர் திணைக்களத்தால் ஆரம்பிக்கபப்ட்டன. இப்பணிகள் எதிர்வரும் ஆண்டில் முன்னெடுக்கப்படும்.

## ஹெனரத்கொட தாவரவியல் பூங்கா, கம்பஹா

பொதுமக்களுக்கான காட்சியகமாகவும் பூக்கள் பாதுகாப்பிடமாகவும் அமையும் வகையிலான ஓகிட் இல்லமொன்றை நிர்மாணிப்பதற்கான விலைமனு அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துக்கு கையளிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் வருடம் இந்நிர்மாணப்பணிகள் ஆரம்பமாகும்.

பூங்காவின் கீழ்க்கட்டுமான வசதிகளை மேம்படுத்தும் வகையில் ஒரு வசந்த இல்லம், ஒரு நாற்றுமேடை அலுவலகம், ஒரு பொலி டனல் ஆகியன நிர்மாணிக்கப்பட்டன.

கல்வி நிலையம், வாகனத் தரிப்பிடம், வடிகான்கள், வள்ளங்கள் மற்றும் ஏனைய கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் புனரமைக்கபப்ட்டன.

தற்போதுள்ள கள அலுவலகம் கட்டிடத் திணைக்களத்தினால் புனரமைக்கப்பட்டு வருகிறது.



கனேவத்த மூலிகைப் பூங்காவில் புதிதாக அமைக்கப்பட்ட வேலி

## கனேவத்த மூலிகைப் பூங்கா

பூங்காவினுள் பயிரிடப்பட்டுள்ள பெறுமதி மிக்க மரங்களைப் பாதுகாக்கவென பூங்காவைச் சுற்றி சங்கிலி வேலி அமைக்கும் பணி பூர்த்தி செய்யப்பட்டது.

தாவரங்களின் பாதுகாப்புக்காக தாவர இல்லம் அமைக்கப்பட்டு, தற்போது பயிரிடல் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அலுவலகக் கட்டிட நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யபப்ட்டு தாவரக்கம் / கண்காட்சி அறைக்கான தளபாடங்கள் கொள்வனவு செய்யபப்ட்டன.

நீர்ப் பம்பி இல்லத்துடனான கிணறு ஒன்றை நிர்மாணிப்பதற்கும் புதிய வாசஸ்தலத்துக்கான சங்கிலி வேலி அமைப்பதற்குமான திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டு மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.

**6.1.2. புதிய தாவரவியல் பூங்காக்களை அமைத்தல்**

தற்போதுள்ள தாவரவியல் பூங்காக்களிற்கான அதிகரித்த எண்ணிக்கையிலான பார்வையாளர்களைக் கருத்திற்கொண்டும், இலங்கையில் 15 தாவர வலயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இப்பல்வேறு வலயங்களிலுமான தாவரப் பேணுகை நோக்கிலும் இரண்டு தாவரவியல் பூங்காக்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறே வட மாகாணத்திலும் தாவரவியல் பூங்காவொன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**அ. உலர் வலய தாவரவியல் பூங்கா, மிரிஜ்ஜவில**

130 வருடங்களின் பின்னர் உள் நாட்டு நிபுணர்களால் வடிவமைக்கப்பட்ட முதலாவது தாவரவியல் பூங்காவான அம்பாந்தோட்டை, மிரிஜ்ஜவில உலர் வலய தாவரவியல் பூங்கா 2013 நவம்பர் 07ம் திகதி இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் ஜனாதிபதி அதிமேதகு மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.



புதிதாங்க அபிவிருத்தி செய்யப்பட்ட நுழைவாயில்



அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் பூங்கா திறந்து வைக்கப்படுகிறது.

இலங்கையில் நடைபெற்ற பொது நலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை நினைவு கூருமுகமாக 2013 நவம்பர் 14ம் திகதி பி.ப. 4.30 மணிக்கு, அதிமேதகு ஜனாதிபதி மற்றும் வருகை தந்திருந்த தலைவர்களின் பங்கேற்போடு மரநடுகை நிகழ்ச்சித் திட்டமொன்றும் அங்கு நடைபெற்றது. அன்றைய தினம் இப்பூங்கா பொது மக்களுக்காகத் திறந்து வைக்கவும்பட்டது.



**உலர் வலய தாவரவியல் பூங்காவின் மேம்படுத்தபட்ட உள்ளக வீதிகள்**



**அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் மரமொன்று நடப்படுகிறது.**



**வானொட்டு நாட்டின் பிரதமரை மர நடுகைக்காக அமைச்சரும் அமைச்சுச் செயலாளரும் அழைத்துச்செல்லல்**

கடந்த வருடம் முழுதும் தொடர்ந்த இதன் பிரதான நிர்மாணப் பணிகள் அனைத்தும் அது திறந்து வைக்கப்படுமுகமாக பூர்த்திய செய்யபப்ட்டன. அதாவது நுழைவுக் கட்டிடத்தொகுதி, வாகனத் தரிப்பிடம், மலசலகூடங்களுடனான நிழல் இல்லங்கள் மூன்று, ஊழியர் விடுதி, குடிநீர் வசதிகள், உள்ளக வீதிகள், நில வடிவமைப்புக்கள், பிரதான பூந்தோட்டம், கட்டிடங்களும் கட்டமைப்புக்களும், அடிப்பாதைகள், புதர்த் தோட்டங்கள், கள்ளித் தாவரச் சேகரிப்பு ஆகியவற்றின் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன

பிரதேச பூவளர்ப்போருக்கு வசதி செய்து கொடுக்கும் வகையில் பூச்செடிச் செய்கை அபிவிருத்திப் பணிகள் மேம்படுத்தப்பட்டன. பூங்காவின் உயிரிச் சேகரிப்பும் மேம்படுத்தப்பட்டு, பூச்செடிச் செய்கை விரிவாக்க அலுவலகமும் இரண்டு நிழல் இல்லங்களும் அமைக்கப்பட்டன.

**ஆ. புதிய ஈர வலய தாவரவியல் பூங்கா, அவிசாவலை**

இப்பூங்காவுடன் இவ்வருடம் 25 ஏக்கர் காணி இணைத்துக்கொள்ளப்பட்டது. மேலும் இதன் ஏனைய அபிவிருத்திப் பணிகளும் முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டு நிறைவை அண்மித்துள்ளன. 2014ம் ஆண்டில் இதனைத் திறந்து வைக்க எதிர்பார்க்கப்படுகிறது.

அரச பொறியியல் கூட்டுத் தாபனத்தினால் பிரதான நுழைவாயில் மற்றும் பார்வையாளர் நிலையம்



**அவிசாவலை ஈர வலய தாவரவியல் பூங்காவின் நுழைவுப் பகுதி**

ஆகியன அமைக்கப்பட்டு வருவதோடு அவற்றின் 90% நிர்மாணப்பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

நுழைவுப் பகுதிக்கு அண்மையில் குளமொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் குளத்தை விஸ்தரிக்கும் பணிகளும் இவ்வருடம் பூர்த்தி செய்யபப்ட்டு மருத மரத் தோட்டமும் விஸ்தரிக்கபப்ட்டது. அத்தோடு உள்ளக வீதிகளும் சுமார் 6 கி.மீ. கள் வரை இண்டர்லொக்ஸ் கற்கள் பரத்தப்பட்டு மேம்படுத்தப்பட்டன.




**விரிவாக்கம் செய்யப்பட்ட குளத்தின் அழகிய தோற்றம்**

பூங்காவின் மேற்பகுதியில் சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பில் ரோசாப் பூத்தோட்டம் ஒன்றை அமைக்கும் பணிகள் முன்னேடுக்கபப்ட்டுள்ளன. இதற்காக நிலத்தைத் துப்புரவு செய்து பதப்படுத்தும் பணிகள் நிறைவு செய்யபப்ட்டுள்ளன.

பிரதேச பூச்செடிச் செய்கையாளர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கும் பொருட்டு பூச்செடிச் செய்கை அபிவிருத்திப்பணிகள் மேம்படுத்தப்பட்டன. தாவர நடுகைத் திட்டங்கள் மூலம் பூங்காவின் உயிரிச் சேகரிப்பும் மேம்படுத்தப்பட்டது.

.



**ரோசாப் பூந்தோட்ட அபிவிருத்திப் பணிகள்**

**மருத** (*Terminalia arjuna*) மரங்கள் ஐந்து வேருடன் பிடுங்கப்பட்டு மருத மரத் தோட்டத்தில் மீள் நடப்பட்டன.




**மீள் நடப்பட்ட மருத (*Terminalia arjuna*) மரங்கள்**

தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொதுப் பொழுது போக்கு அமைச்சர் கௌரவ ஜயரத்ன ஹேரத் . அவர்களும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் கௌரவ கீதாஞ்சன குணவர்தன அவர்களும் பூங்காவின் அபிவிருத்திப் பணிகளைப் பார்வையிட்டனர்.



**அமைச்சர்களின் விஜயம்**

### 6.1.3. அலங்கார பூச்செடியியல் அபிவிருத்தி

சன நெரிசல் மிக்க பிரதேசங்களில் தாவரங்களை நட்டு பேணி வளர்த்தலையே இது குறிக்கிறது. பொது இடங்களை அபிவிருத்தி செய்யப் பல்வேறு நடவடிக்கைகளும் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வகையில் அரச தாவரவியல் பூங்காவினால், நிலவடிவமைப்பு பூங்காவியல் பற்றி பின்வரும் நிறுவனங்களுக்கு ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டன.

***புனித ஸ்தலங்கள்***

மதன்வல ராஜ மஹா விகாரை
மல்வத்து மஹா விகாரை, கண்டி
மல்வத்து விகாரை
தலியல்பிட்டிய புராண விகாரை

***வைத்தியாசாலைகள்***

டிக் ஓயா புதிய வைத்தியசாலை
கேகாலை பொது வைத்தியசாலை

***பாடசாலைகள்***

புனித அந்தோனியார் கல்லூரி,
கட்டுகஸ்தோட்டை
கொப்பேகடுவ வித்தியாலயம்

***ஏனைய இடங்கள்***

கோள் மண்டலம், கொழும்பு
தாமரைத் தடாகம்
ஹந்தான தேயிலை நூதனசாலை
சுற்றுலா ஊக்குவிப்பு அலுவலகம், மாத்தளை
இராணுவ முகாம், கன்னோருவ
ரிவர் சைட் பொறியியல் பயிற்சி நிலையம்,
கொத்மலை
சர்வதேச பயிற்சி நிறுவகம், கொத்மலை
மாத்தளை, ஏற்றுமதி விவசாயத்
திணைக்களத்தின் வாசனைத்திரவியத்
தோட்டம்

இதற்கு மேலதிகமாக, "தேசத்துக்கு மகுடம்" கண்காட்சிக்காக அம்பாறையில் நில வடிவமைப்புப் பூங்காவியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, மன்னார் தீவில் பெருக்கு மரம் ஒன்றை வேரோடு பிடுங்குவதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டன. மேலும் அரச தாவரவியல் பூங்காவின் அலுவலர்களால் மிரிஜ்ஜவில, உலர் வலய தாவரவியல் பூங்காவின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

**கம்பஹா தாவரவியல் பூங்காவினால் வழங்கப்பட்ட நிலவடிவமைப்பு மற்றும் பூங்காவியல் ஆலோசனை சேவைகள்:**

கம்பஹா நகரை அழகுபடுத்தும் ""சுந்தர கம்பஹா" நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கு கொண்டு பின்வரும் ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டன:

கம்பஹா நகர சபை
ஹமில்டன் கால்வாய் அபிவிருத்தி
மினுவான்கொட நகர அபிவிருத்தி
ரத்னாவலி மகளிர் கல்லூரி
நீதவான் நீதிமன்றம், கம்பஹா
தொழில் பயிற்சி அதிகார சபை, கம்பஹா
மாவட்ட செயலகம், கம்பஹா
நீதிமன்ற கட்டிடத் தொகுதி, கம்பஹா
ஹெனரத்கோட்ட புகையிரத நிலையம்

இதற்கு மேலதிகமாக பிரதேசத்தில் மர நடுகை நிகழ்ச்சித் திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஹக்கல தாவரவியல் பூங்காவினால் லிந்துல பொலிஸ் நிலையம் மற்றும் நுவரெலியாவின் நகரப் பூங்கா அபிவிருத்திச் செயற்திட்டம் ஆகியவற்றுக்கு நிலவடிவமைப்பு மற்றும் பூங்காவியல் ஆலோசனை சேவைகள் வழங்கபப்ட்டன.

7

**கல்வி**

- தாவரப் பேணுகை குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கவும் அதன் முக்கியத்துவத்தை சமூகத்தின் பல்வேறு மட்டங்களுக்கும் உணர்த்தும் வகையிலான பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தவும்
- இளம் பூச்செடியியலாளர்களுக்கு பயிற்சி வாய்ப்புக்களை வழங்கி சந்தை இடை வெளியை நிரப்பவும் மேலும்வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை நாடும் பூ வளர்ப்போருக்கு பூச்செடியியல் மற்றும் நிலவடிவமைப்பு பூங்காவியலில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய டிப்ளோமா கற்கை நெறியை வழங்கி நாட்டின் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்கவும்

நாம் எதிர்பார்க்கின்றோம்.

**குறிக்கோள்கள்**

- **நடைமுறைத் தேவைகளை ஈடு செய்யும் வகையில் பயிற்சி நெறிகளை பன்முகப்படுத்துதல்**
- **விரிவுரைகள், கண்காட்சிகள் மற்றும் ஏனைய ஊடகங்களைப் பயன்படுத்துதல்**
- **பிரசுர வெளியீடு**
- **புதிய தொடர்பாடல் தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துதல்**

## 7.1. இக்குறிக்கோள்களை அடைய நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

- **7.1.1. நடைமுறைத் தேவைகளை ஈடு செய்யும் வகையில் பயிற்சி நெறிகளை பன்முகப்படுத்துதல்**

கல்வி மற்றும் பயிற்சி நிலையம் தற்போது நடாத்தும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை பன்முகப்படுத்தி பூச்செயடியியல் மற்றும் தொடர்புடைய துறைகளிலான வாழ்வாதார வாய்ப்புக்களை மேம்படுத்தும் வகையில் பாடசாலை மாணவர்கள், வளர்ந்தோர் ஆகியோரிடையே தாவரங்கள் பற்றிய அறிவையும் ஈடுபாட்டையும் வளர்க்கவும் உயிரியல் பல் வகைமை பேணல் பற்றி விழிப்பூட்டவும் திணைக்களம் பல முயற்சிகளை முன்னெடுத்துள்ளது.

அவ்வகையில் திணைக்களத்தின் கல்வி மற்றும் பயிற்சி நிலையமானது, அது நடாத்தும் கற்கை நெறிகளுக்கு இலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழில் பயிற்சி ஆணைக்குழுவின் தேசிய திறன் தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது

விளைவாக, திணைக்களமானது பூச்செயடியியல் மற்றும் நிலவடிவமைப்புப் பூங்காவியலில் மிகவுமே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வருட தேசிய டிப்ளோமா மற்றும் இருவருட உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகளைக் கற்பிக்கும் நிறுவனமாகத் திகழ்கின்றது.

அதன் மூலம் இளம் பூச்செடியியலாளர்களுக்கு பயிற்சி வாய்ப்புக்களை வழங்கி சந்தை இடை வெளியை நிரப்பவும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை நாடும் பூ வளர்ப்போருக்கு உரிய தகைமைகளை வழங்கவும் இப்பயிற்சி நெறிகள் வழி கோலுகின்றன.

## 7.1.2. விரிவுரைகள், கண்காட்சிகள் மற்றும் ஏனைய ஊடகங்களைப் பயன்படுத்துதல்

கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளுக்கு மேலதிகமாக திணைக்களமானது, தொடர் விரிவுரைகளை நடாத்துவதோடு, வெளிக்கண்காட்சிகளிலும் பங்கேற்கிறது.

**அ. விரிவுரைகள்**

கல்வி மற்றும் பயிற்சி நிலையத்தால் நடாத்தப்பட்ட ஒரு நாள் பயிற்சி வகுப்புக்கள்:

| பயிற்சி வகை | பயிற்றப்பட்ட தனி நபர்கள் |
|---|---|
| நாற்று மேடை முகாமை | 729 |
| பூங்காவியல் நில வடிவமைப்புத் தாவரங்களை அடையாளம் காணல் | 488 |
| மர ஆரோக்கியம் மற்றும் பேணுகை | 161 |
| நில வடிவமைப்பு | 2,037 |
| அறுவடைக்குப் பின்னரான தொழில் நுட்பம் | 66 |
| தாவர உருவியல் | 50 |
| பூ அலங்காரங்கள் | 522 |
| வேறு | 1,302 |
| **மொத்தம்** | **5,085** |

இவற்றுக்கு மேலதிகமாக பேராதனை அரச தாவரவியல் பூங்காவின் கல்வி மற்றும் பயிற்சி நிலையத்தில் 96 இளைஞர், யுவதிகளுக்கு நவீன தொழில் நுட்பங்களுடனான பூச்செடியியல் மற்றும் நிலவடிவமைப்புத் துறை சார் மூன்று மாதக் கற்கை நெறி கற்பிக்கப்பட்டதோடு, 253 இராணுவ வீரர்களுக்கு நிலவடிவமைப்புப் பூங்காவியலில் பயிற்சியளிக்கப்பட்டது.





**3 மாதக் கற்கை நெறி மாணவர்களின் பிரயோக அமர்வுகள்**

கம்பஹா தாவரவியல் பூங்காவில் வழங்கப்பட்ட பயிற்சிகள்

| விடயம் | கால அளவு | வகுப்புக்கள் | பங்குபற்றியோர் |
|---|---|---|---|
| நாற்றுமேடை முகாமை | 01 நாள் வகுப்புக்கள் | 01 | 03 |
| நிலவடிவமைப்பு | 01 நாள் வகுப்புக்கள் | 02 | 70 |
| | 14 நாள் பிரயோகக் கற்கை | 01<br>01 | 19<br>04 |
| நிலவடிவமைப்பு மற்றும் பூச்செடியியல் | 06 மாதக் கற்கை | 01 | 12 |

**ஆ.**

**கண்காட்சிகள்**

ஜனவரி 9 - 13ம் திகதிகளில் பாதுக்கவில் இடம்பெற்ற “சீதாவக அபிமன்” கண்காட்சியில் திணைக்களத்தின் காட்சியறையொன்று ஏற்படுத்தப்பட்டது.

அவ்வாறே, ஜுலை 08 – 12 ம் திகதிகளில் விவசாயத் திணைக்களம் வாரியபொலையில் ஏற்பாடு செய்திருந்த, “கொவி சதிய:” கண்காட்சியிலும் திணைக்களத்தின் காட்சியறையொன்று ஏற்படுத்தப்பட்டது

2013 மார்ச் மாதம் 23 - 29 ம் திகதிகளில் அம்பாறையில் நடைபெற்ற “தேசத்துக்கு மகுடம்” கண்காட்சியின் ஏற்பாடுகளுக்கு திணைக்களத்தின் அதிகாரிகள் பங்களிப்புச் செய்ததோடு அதில் ஒரு காட்சி கூடத்தையும் அமைத்தனர்.



**தேசத்துக்கு மகுடம் கண்காட்சியில் அலுவலர் ஒருவரால் விளக்கமளிக்கப்படுகிறது.**

இ. ஊடக நிகழ்ச்சி

ரூபவாஹினி தொலைக்காட்சி சேவையில், தாவரங்கள் குறித்த விவரணத் தொடரான “துரு விசிதுரு” நிகழ்ச்சி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சிரில் விஜேசுந்தர அவர்களால் திணைக்கள அதிகாரிகளின் பங்கேற்புடன் நடாத்தபட்டு பொதுமக்களுக்கு பல்வேறு தாவரங்கள் பற்றியும் அவற்றின் தன்மைகள், பயன்கள் பற்றியும் அறிவூட்டல் வழங்கப்பட்டது.

தாவரப் பயிரிடல், பூச்செடியியல் அபிவிருத்தி நடவடிக்கைகள், பீடை மற்றும் நோய்க்கட்டுப்பாடு குறித்த எட்டு வானொலி நிகழ்ச்சிகளைத் தயாரிக்க திணைக்கள அலுவலர்கள் வளவாளர்களாகப் பங்களிப்பு நல்கினர்.

லக்பிம பத்திரிகையில் ஓகிட்கள் குறித்த நான்கு கட்டுரைகள் பிரசுரமாகின.

- **7.1.3. பிரசுர வெளியீடு**

தாவரங்கள், பூங்காவியல் மற்றும் பூச்செடியியல் பற்றிய பல பிரசுரங்கள் இவ்வருடம் வெளியிடப்பட்டன.

அ. பிரசுரங்கள்

“”இலங்கையின் வனப் பூக்கள் ” என்ற புத்தகம் அச்சிடப்பட்டது. இப்புத்தகமானது 250 தாவர வகைகளது புகைப்படங்களுடன் அவற்றின் விஞ்ஞான / பொதுப் பெயர்கள், பாதுகாப்பு நிலை, வாழிடம் குறித்த தகவல்களைக் கொண்டுள்ளது.



பூச்செடியியல் குறித்த பிரசுரங்கள்




வெளிநாட்டுத் தாவரங்கள் குறித்த பிரசுரங்கள்




200 தாவர வகைகளது புகைப்படங்களுடன் அவற்றின் விஞ்ஞான / பொதுப் பெயர்கள், பரவல் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய “இலங்கையின் பொதுவான வீதியோரத் தாவரங்கள்” என்ற புத்தகம் இவ்வருடம் தொகுக்கப்பட்டது. இதன் சிங்கள தமிழ் பதிப்புக்கள் 2014ம் ஆண்டில் வெளிவரும்.

இலங்கையின் மத்திய மலை நாட்டின் பாசித் தாவரங்கள் பற்றிய புத்தகமொன்றினை தேசிய தாவரக்கயம் தயாரித்து வருகிறது.

தாழ் நிலத் தாவரங்கள் குறித்த மூன்று பிரசுரங்களும் பூக்கும் மூலிகைகள் மற்றும் படரிகள் குறித்த பிரசுரமொன்றும் தவரக்கயப் பணிகள் குறித்த பிரசுரங்கள் ஐந்தும் தேசிய தாவரக்கயத்தினால் தயாரிக்கப்படுகின்றன.

பேராதனை, அரச தாவரவியல் பூங்காவினால் வெளிநாட்டுத் தாவரங்கள் குறித்த இரண்டு பிசுரங்கள் வடிவமைக்கபபட்டதோடு, எமது நாட்டுக்கு மாத்திரமுரிய 10 தாவரங்கள் பற்றிய இரு கல்வி வெளியீடுகளும் தயாரிக்கப்பட்டன.

**ஆ. பூச்செடியியல் குறித்த பிரசுரங்கள்**

“சுவஹஸ் மல்” நிகழ்ச்சித் திட்டத்தின் நடவடிக்கைகள் பற்றிய செய்தி மடல்கள் இரு மலர்களாக வெளியிடப்பட்டன. மொத்தமாக 8,000 பிரதிகள் அச்சிடப்பட்டன.

15 தலைப்புக்களிலான பிரசுரங்கள் 1000 பிரதிகள் வீதம் மீள் பிரசுரம் செய்யப்பட்டன. 30 க்கு மேற்பட்ட தாவரங்கள் குறித்து அவற்றின் பயிர்ச்செய்கை, பேணுகை பற்றிய தகவல்களை உள்ளடக்கிய “தெரிவு செய்யப்பட்ட பூச்செடியியல் பயிர்களைப் பயிரிடல்” என்ற புத்தகமும் அச்சிடப்பட்டது.




செய்தி மடல்கள்

**இ. வேறு**

பேராதனை, ஹக்கல தாவரவியல் பூங்காக்களின் வழிகாட்டல் கையேடுகள் மும்மொழிகளிலும் கிடைக்கச்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**8**

**திணைக்களத்தின் நிர்வாகம்**

- ஒவ்வொரு வருடமும் கொள்கைகளையும் நடைமுறைகளையும் மீளாய்வு செய்து அவற்றைத் தொடர்ச்சியாக மேம்படுத்தவும் அதன் மூலம் பூங்காக்களின் செயற்றிறனை அதிகரிக்கச்செய்யவும் பணியாளர் எண்ணிக்கையை மீளாய்வு செய்து வெற்றிடங்களை உரிய நேரத்தில் நிரப்பவும் பணியாளர்களுக்கான வசதிகளை மேம்படுத்தவும்
- இலத்திரனியல் வர்த்தகத்தை அறிமுகப்படுத்தி பூங்காக்களை தரிசிப்பதற்கான கட்டணங்களை கடன் அல்லது வைப்பு அட்டைகள் மூலம் செலுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்தவும்

**நாம் எதிர்பார்க்கின்றோம்**

**குறிக்கோள்கள்**

- **பணியாளர் தேவைகளும் வசதிகளும்**
- **தகவல் தொழில் நுட்பப் பாவனை**

**8.1. இக்குறிக்கோள்களை அடையும் பொருட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

**8.1.1. பணியாளர் தேவைகளும் வசதிகளும்**

பூங்காக்களின் செயற்றிறனை மேம்படுத்தும் பொருட்டு பணியாளர்களின் வசதிகள் மேம்படுத்தப்பட்டன.

**அ. பணியாளர் வசதிகள்**

கம்பஹா தாவரவியல் பூங்காவின் 2ம் இலக்க அலுவலர் குடி மனையும் பேராதனை பூங்காவின் சில பணியாளர் குடி மனைகளும் திருத்தியமைகக்ப்பட்டன.

திணைக்களத்தின் எல்லையினுள் அமைந்துள்ளதும் ஹதபிம அதிகார சபைக்குச் சொந்தமானதுமான கட்டிடத்தின் ஒரு பகுதி பெற்றுக்கொள்ளப்பட்டு, திருத்தியமைக்கபப்ட்டு திணைக்களத்தின் நிர்வாக அலகு அங்கு நகர்த்தபப்ட்டது. அக்கட்டிடத்தின் எஞ்சிய பகுதியைப் பெற்றுக்கொள்வதற்கான பணிகள் ஆரம்பிக்கபப்ட்டுள்ளன.



**திணைக்களத் தலைமைப் பணிமனையுடன் இணைக்கப்பட்ட பகுதி**

திணைக்களத்தின் தலைமைப் பணியகத்தில் மாநாட்டு மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டது.

**ஆ. பணியாளர் எண்ணிக்கையை மீளாய்வு செய்து வெற்றிடங்களை நிரப்புதல்**

பட்டதாரி அபிவிருத்தி அலுவலர்களுக்கான 20 புதிய வெற்றிடங்கள் உருவாக்கபப்பட்டு அதற்கான அனுமதி பெறப்பட்டது.

பீ.எல். 2 வகை சார்ந்த ஆரம்ப நிலை தகுதி காண் பதவிகள், விஷேட இரசாயண கூட தொழிலாளர் பதவிகள் மற்றும் உதவிக் கட்டண அறவீட்டாளர் பதவிகள் (எம் என் - 1) ஆகியன பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டன.

முகாமைத்துவ உதவியாளர் தொழில் நுட்பம் iii க்கான (எம் டீ - 1) ஆட்சேர்ப்பு ஒழுங்கு திருத்தங்களுடன் அனுமதிக்கப்பட்டது. அத்தோடு ஆரம்ப நிலை தொழில் நுட்பம் சாராத பதவிகள் (பீ. எல் - 1) மற்றும் விஞ்ஞான சேவை ஆட்சேர்ப்பு ஒழுங்குகள், இறுதி அனுமதிக்காக பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கபப்ட்டுள்ளன.

தற்போது திணைக்களத்தில் பணியாற்றும் விவசாய சேவையைச் சேர்ந்த அலுவலர்கள் 13 பேர் விஞ்ஞான சேவைக்கு உள்ளீர்க்கபப்ட்டனர்.

**இ. முன்னேற்றத்தைப் பரிசீலனை செய்தல்**

**மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்தி வருடத்துக்கான திட்டமிடப்பட்ட முன்னேற்றம் அடையப்படுகிறதா? என்பது பற்றி ஆராயப்பட்டது.**

- **8.1.2. தகவல் தொழில் நுட்பப் பாவனை**

திணைக்களத்தின் ஊழியர்களுக்கான சம்பளப் பட்டியல் தயாரிப்பு கணணி மயப்படுத்தபப்ட்டது.

அவ்வாறே, கைத்தொலைபேசி ஊடாக நுழைவுச் சீட்டுக் கொள்வனவுக்கான வசதிகள் ஏற்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

**திணைக்களத்தின் ஏனைய அலகுகளின் நிர்வாகம்**

### 9.1. அதிமேதகு ஜனாதிபதி மற்றும் மாண்புமிகு பிரதமர் ஆகியோரது வாசஸ்தலப் பூங்காக்கள்

அதிமேதகு ஜனாதிபதி அவர்களது அலரி மாளிகை, கொழும்பு 01, கண்டி, நுவரெலியா, அனுராதபுரம் ஆகிய பிரதேச வாசஸ்தலங்களின் பூங்காக்களும் மாண்புமிகு பிரதமர் அவர்களது கொழும்பு மற்றும் நுவரெலியா ஆகிய பிரதேச வாசஸ்தலங்களின் பூங்காக்களும் உயர் தரத்தில் பேணப்பட்டதோடு அவற்றின் திட்டமிடப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.



இந்திய முன்னாள் ஜனாதிபதி கலாநிதி அப்துல் கலாம் அவர்கள் அலரி மாளிகையில் மரமொன்றை நடுகிறார்

அதிமேதகு ஜனாதிபதி அவர்களது நுவரெலியா வாசஸ்தல உள்ளக வீதிகள் அனைத்தும் காபட் இடப்பட்டு மற்றும் இரு மருங்கிலும் கேர்ப்ஸ் பதித்து மேம்படுத்தப்பட்டன. அதன் புற்தரையும் மேம்படுத்தப்பட்டது.

மரக்கறி நடுகைக்காக அங்கு இரண்டு பொலி டனல்களும் அமைக்கபப்ட்டன. பூங்காவின் சுற்று வேலி இராணுவத்தினரால் புனரமைக்கப்ப டுகிறது.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களது கண்டி வாசஸ்தலத்தில் விவசாயத் திணைக்களத்தால் நிறுவப்பட்ட தாவர இல்லத்துக்கு அண்மையில் புதிதாக ஒரு காய்கறித் தோட்டம் அமைக்கப்பட்டதோடு, பாதுகாப்பற்ற மரமொன்று (*Agathis robusta)* அரச பலகைக் கூட்டுத்தாபனத்தால் அங்கிருந்து அகற்றப்பட்டது.



**பிரதமரது கொழும்பு வாசஸ்தலப் பூங்கா**

பிரதமர் அவர்களது கொழும்பு வாசஸ்தலப் பூங்காவில் உள்ள பழைய மா மரங்களைப் பேணும் நடவடிக்கைகள் விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. தாவர இல்லம் மேம்படுத்தப்பட்டு புதிய பூச்சாடிகள் வைக்கப்பட்டன. பூங்காக்களில் பயிரிடல் பொருட்களை வைப்பதற்கான சீமெந்துக் கொள்கலன்கள் அமைக்கப்பட்டன.

அனைத்து வாசஸ்தலப் பூங்காக்களிலும் உள்ள பூ, மரக்கறி மற்றும் பழப் பயிர்களின் நாற்றுமேடைகள் சிறந்த முறையில் பேணப்பட்டு தேவையின் போது பூக்கள், மரக்கறிகள் மற்றும் பழங்கள் வழங்கப்பட்டன.

.

**9.2. பொது நலவாய போர் சமாதிகள்**

இரண்டு உலகப் போர்களிலும் உயிர் நீத்த பொது நலவாய நாடுகளின் போர் வீரர்களை நினைவு கூருமுகமாக இப் பூர் சமாதிகள் பேணப்படுகின்றன. இலங்கையில் கண்டி, ஜாவத்தை, பொரல்ல மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களிலுள்ள நான்கு பொது நலவாய போர் சமாதிகளும் உயர் தரத்தில் பேணப்பட்டன.



**ஜாவத்தை போர் சமாதியைப் பார்வையிட்ட தூதுக்குழுவினர்**



**கண்டி பொதுநலவாய போர் சமாதி**

**இவ்வருடம் போர் சமாதிகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்:**

ஜாவத்தை மற்றும் பொரல்ல பொதுநலவாய போர் சமாதிகள் ஸோசியா புற்கள் நடப்பட்டு மேம்படுத்தப்பட்டன.

கண்டி பொதுநலவாய போர் சமாதியின் புற்றரைக்கு ஏற்பட்ட பீடைத் தாக்கம் கட்டுப்படுத்தபட்டது.

திருகோணமலை போர் சமாதியின் மூன்றாம் கட்ட புற்றரைப் புனரமைப்புப் பணிகள் சுமார் 1000 சதுர மீட்டர்கள் வரை செய்து முடிக்கப்பட்டன.

அனைத்துப் போர் சமாதிகளிலும் பணியாற்றும் ஊழியர்களுக்கு, பொதுநலவாய போர் சமாதிகள் ஆணைக்குழுவினால் அவர்களது இலச்சினையுடனான புதிய சீருடையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

மத்திய மாகாண விவசாயத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட, சிறந்த முறையில் பராமரிக்கப்படும் பூங்காக்களுக்கான போட்டியில் கண்டி பொதுநலவாய போர் சமாதி இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

ஐக்கிய இராச்சியத்திலிருந்து வருகை தந்து ஜாவத்தை போர் சமாதியைப் பார்வையிட்ட தூதுக்குழுவினர் அதன் சிறந்த முகாமை குறித்துப் பாராட்டுத் தெரிவித்தனர்.

**9.3 தாவரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியம்**

இலங்கையின் தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியம் என்ற பெயரில் அப்போதைய விவசாய, காணி மற்றும் வனவள அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட 1995-12-15ம் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தை கருத்திற்கொண்டு 1996-02-07ம் திகதி ஏற்படுத்தப்பட்டது.

தாவரவியல் பூங்காக்களுக்கான நுழைவுச் சீட்டு விற்பனையின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 25%த்தை வருடாந்தம், தாவரவியல் பூங்காக்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றின் நலன்புரி நடவடிக்கைகளுக்குமான நம்பிக்கை நிதியத்திற்கான வருமானமாக ஒதுக்கீடு செய்வதோடு, இந்நிதியத்தின் பிரதான வருமான மூலம் அதுவாகும். அதற்கு மேலதிகமாக இந்நிதியமானது தனது வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக பொருத்தமான நடவடிக்கைகளில் ஈடுபடவும் முடியும்.

**நம்பிக்கை நிதியத்தின் குறிக்கோள்கள் :**

- இலங்கையிலும் மற்றும் வெளிநாடுகளிலும் எமது தாவரவியல் பூங்காக்கள் தொடர்பில் நிலவும் அபிப்பிராயங்களை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- சூழலியல், கல்வியியல் மற்றும் தாவரங்கள் தொடர்பில் தற்போது நிலவும் பாதுகாப்பு முறைமைகள் பற்றி அர்த்தமுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- தாவரவியல் பூங்காக்களில் சேவையில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகளது துறைசார் அறிவு, செயற்பாடுகள் மற்றும் வசதிகளை மேம்படுத்துவதோடு உரிய செயற்பாடுகளுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதியுதவி வழங்குதல்.
- தாவரச் சேமிப்புக் குறித்தும் முன்னேற்றகரமான வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல்.
- தாவரவியல் பூங்காக்களின் பயன்பாட்டுக்காக சூழலியல், கல்வியியல் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பிலான தொழில்நுட்பத்துறை சார் செயற்பாடுகளை மேம்படுத்தலும் அவற்றுக்கு உதவுவதும்.
- தாவரவியல் விஞ்ஞானிகளுக்கும் மற்றும் பூங்காவிற்கு வருகை தருகின்றவர்களுக்கும் தேவையான வசதிகளைச் செய்துகொடுப்பதற்குத் தேவையான எந்தவொரு அவசர நிர்மாணாப் பணியையும்பொறுப்பேற்றல்.
- தேவையான சந்தர்ப்பகளில் மீண்டெழும்செலவினங்களுக்கான ஒதுக்கீடுகளில் ஏற்படும் குறைகளை குறை நிரப்புச்செய்தல்.

